DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416 – 752 – 1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1533
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday August 22, 2025

# 2025 Graduation Ceremony of Computek College in Toronto

## Over 500 Graduates were awarded with their Diplomas

# கொம்பியுடெக் கல்லூரியின் 2025ம் ஆண்டிற்கான தொழிற்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

### 500க்கும் அதிகமான மாணவர்களுக்கு டிப்ளோமாச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன



கனடாவில் வெவ்வேறு துறைகளில் பயிற்சி நெறிகளையும் தொழில் அனுபவத்தையும் வழங்கும் வகையில் வெவ்வேறான துறைகளில் வழங்குவதில் முன்னணியில் திகழும் கொம்பியுடெக் கல்லூரி (Computek College) நடத்திய வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமையன்று 19ம் திகதி மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 500க்கும் அதிகமான மாணவ மாணவிகளுக்கு அன்றையை தினம் அவர்கள் தேர்ந்தெடுத்த துறைகளில் கற்றுத் தேர்ந்ததை உறுதிப் படுத்தும் முகமாக டிப்ளோமாச் சா ன்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

கொம்பியுடெக் கல்லூரி மற்றும் அதனோடு இணைந்து செயற்படும் நிறுவனங்களின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான முரளி ஸ்ரீநாராயணதாஸ் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் அங்கு தலைமையுரை ஆற்றியபோது கனடா என்னும் அற்புதமான தேசம் மதம் மொழி இனம் போன்ற பிரிவினைகளை கவனத்தில் எடுக்காது இந்த நாட்டுக்கு வந்தவர்களை அன்போடு அரவணைத்து அவர்களின் எதிர்காலத்தை திட்டமிட உதவி வருகின்றது. அந்த வகையில் எமக்கு விருப்பமான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க நாம் தொழிற்பயிற்சிகளை இலவசமாக பயிலும் வாய்ப்பை எமது கல்லூரி வழங்குகின்றது என்றார்.

( தொடர்ச்சி 16ம் பக்கம்)



# இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வியாழனன்று தேரேறி அனைவருக்கும் அருள்பாலித்த நல்லூரான்

(எமது யாழ்ப்பாணச் செய்தியாளர் நடராசா லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா 21ம் திகதியன்று வியாழக்கிழமை காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.15 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று ஆறுமுகப் பெருமான் வள்ளி - தெய்வானை சமேதராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

ரொறன்ரோ

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி



**4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான**

# தமிழ், சமய, பண்ணிசை

## வகுப்புக்கள் 07.09.2025 ஆரம்பம்

**எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி கடந்த 19 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.**

**புதிய மாணவர்களுக்கான விண்ணப்பப் பதிவினை www.varasiththi.com இணையத்தளத்தில் மேற்கொள்ளலாம். நேரடியான பதிவு 23.08.2025 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.**




**வகுப்புக்கள் நடைபெறும் நேரம்**
ஞாயிற்றுக்கிழமை காலை 9:15 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:15 முதல் 4:45 வரை




**Sri Varasiththi Vinaayagar Hindu College**
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416-291-8500


WWW.VARASITHTHI.COM | VARASITHTHI@GMAIL.COM | VARASITHTHI




C.Y.E.C.S

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையும்
Centre for Youth Empowerment and Community Services அமைப்பும் இணைந்து நடத்தும்

# 'உங்களோடு இசைக்கவி ரமணன்'



மொழியும் கலையும் கவிதையும் சங்கமிக்கும் ஒரு மாலைப் பொழுது



இடம்: பைரவி நுண்கலைக் கூடம் - கலையரங்கம்
27 Casebridge Ct. Unit 5, Scarborough, ON M1B 4Y4
காலம்: 30-08-2025 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு



விழாத் தலைவர்: லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள்
(தலைவர் - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கனடாக் கிளை)

வாழ்த்துரைகள்:
கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள்
(காப்பாளர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க்ம் - அகிலச் செயற்குழு)
சிவா கணபதிப்பிள்ளை அவர்கள்
(அகிலச் செயற்குழுத் தலைவர் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்)

கவியரங்கம்: தமிழர் பண்பாட்டைப் பேணி.
தரணியில் உயர்ந்திடுவோம்!
தலைமை: பாவலர் இராஜமீரா இராசையா
பங்குபெறும் கவிஞர்கள்: 1) பாவலர் சி. சண்முகராஜா
2) பாவலர் அகணி சுரேஷ்
3) பாவலர் பவானி தர்மகுலசிங்கம்
4) பாவலர் சயந்தன் பசுபதி
5) பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை



"கவிஞர் கண்ணதாசனும் நாமும்"
உரையும் இசையும் கலந்து வழங்குபவர்
'இசைக்கவி ரமணன்'

"இசைக்கவி ரமணன்" அவர்களை சபையோருக்கு அறிமுகம் செய்தல்:
திரு. சிவன் இளங்கோ
(சமூகச் செயற்பாட்டாளர். ரொறன்ரோ பல்கலைக் கழக "தமிழ் இருக்கை" மற்றும்
ஹாவர்ட் பல்கலைக் கழக தமிழ் இருக்கை ஆகியவற்றை நிறுவுவதில் கனடாவில் முக்கிய பங்கு வகித்தவர்)

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!
மேலதிக விபரங்களுக்கு: (416) 732-1608 | (416) 899-6044 | (647) 891-7725

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# புதைத்தவர்கள் அவர்கள்! தோண்டுபவர்கள் நாங்கள்!

## மாங்கனித் தீவி மறுபாதியெங்கும் தொலைந்து போன நம் உறவுகளின் எலும்புக்கூடுகள் எழுந்து வருகின்றன?

மாறி மாறி வந்த அரசாங்கங்களின் அடக்கு முறைகளிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்ற புரட்சிகரமான சிந்தனைகள் தோன்றிய நாட்கள் எம்மவர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தந்து நின்றன. மனதில் தோன்றிய சிந்தனைகள் செயற்பாடுகளாய் மாறியபோது அவர்கள் விழித்துக் கொண்டார்கள். ஆயுதம் ஏந்தியவர்கள் தான் அவர்களுக்கு எதிரிகளாகத் தெரியவில்லை. போராளிகள் பேசிய மொழியைப் பேசிய அனைவருமே அவர்களின் எதிரிகளாக அவர்களே வரித்துக் கொண்டார்கள்.

அப்பாவிகளாய் வீதிகளின் சென்ற அப்பாக்கள். அம்மாக்கள். தம்பிகள். தங்கைகள். மாமாக்கள் இவ்வாறான எம்மவர்களை நோக்கிய அவர்கள் குறி வைத்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல எமக்காக ஆயதங்களை ஏந்திநின்றும் தங்கள் இன்னுயிர்களை துச்சமென மதித்தும். காடுகளிலும் புதர்களுக்கிடையிலும் மறைவான வாழ்க்கை. வேளியில் கண்களுக்கு தெரிந்தவர்களை வேட்டையாடத் தொடங்கினார்கள் அவர்கள்.

கைது செய்து கொண்டு போகின்றார்கள் எம்மவர்களை காவல் நாய்களாகத் தெரிந்த சீருடைக்காடையர்கள். நாங்கள் பார்த்து நிற்கையில் கதறக்கதற எம் உறவுகளை வாகனங்களில் அடைத்துக் கொண்டபடி “விசாரணை” என்ற பெயரில் அழைத்துச் செல்கின்றார்கள்.

நாட்டில் நாங்கள் சிறுபான்மை இனமாக இருந்தாலும் சட்டம் உள்ளது தானே! அது பொது மக்களுக்கு “பொதுவானது” தானே! ஏன்று எம்மிடமிருந்து அவர்களால் கவர்ந்து செல்லப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியில் உள்ளார்கள். ஒரு நாள் வருவார்கள் என்று காத்திருந்தோம். வீதிகளில் நின்று குரல் எழுப்பினோம்.! நாம் வாக்களித்த காரணத்தால் பாராளுமன்றத்திற்கு சென்றவர்களை தேட வேண்டியிருந்தது. எப்போதாவது ஒரு நாள் தொகுதிக்கு வருவார்கள். அழகியதும் விலைகளின் அதிகமானதுமான நவீன நான்கு சில்லு வாகனங்களில். சாரதியும் பாதுகாப்புக்கு எம்மை நிந்திக்கும் மொழி பேசும் சீருடைக்காரர்கள் அவர்களை பாதுகாக்கும் பணிகளில். எம் தலைவர்களோ எங்கள் பிரச்சனைகளை அறிந்து கொள்ளவோ அன்றி எம்மைத் தேற்றவோ தயாராக இல்லை.

எம்மை நசுக்குகின்றவர்கள் அவர்களின் “நண்பர்கள்” அகிவிட்டார்கள். இதனால் அவர்களுக்கும் பகையாளிகளாகத் தெரிந்த நாங்கள் எங்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கும் வேண்டாதவர்களாக ஆகிவிட்டோம். காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களாகிய எம் உறவுகள் இன்னும் விசாரணைக்கு உள்ளாகி இருப்பார்கள் என்ற நப்பாசையில் காத்திருந்தோம்.

ஆனால். நாட்கள் மாதங்களாக மாறியும் மாதங்கள் வருடங்களாக விரிந்தும். வருடங்கள் தசாப்த்தங்களாக தொடர்ந்தும் போய்க்கொண்டிருக்க. நாங்கள் எம் உறவுகளைத் தேடியபடி அரசாங்கத்தையும் அமைச்சர்களையும் வெளிநாடுகளின் தூதர்களையும் நாடியும் தேடியுமாய் தவித்துக் கொண்டிருந்தோம்.

சிறைகளில் இருப்பார்கள் என்று நாம் சிந்தித்துக் கொண்டிருந்த போது எம் உறவுகள் எந்தச் சிறைகளிலம் இல்லை என்ற செய்திகள் வந்து சேர்ந்தன. எமது கண்களுக்கு முன்பாக கைகள் கட்டப்பட்டபடி கயவர்களால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் என்றோ ஒரு நாள் ஒரு இடத்தில் எமக்கு காட்சி தருவார்கள் என்று காத்திருந்தோம்.!

திடீரென செம்மணி மயானத்தில் தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஒன்றாய். பத்துக்களாய் பெருகிட பின்னர் நூறாய் அதிகரித்துச் செல்ல. அரச படைகளால் கைது என்ற பெயரில் கண்களில் கண்ணீருடன் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அனைவருமே கொன்று புதைக்கப்பட்ட அப்பாவிகளாக எம் மனக் கண்களுக்கு முன்பாக நம் உறவுகள் அனைவரும் தோன்றினார்கள்.

நாட்கள் நகர்ந்தன. நாமும் கலங்கியபடி செய்திகளுக்காக ஏங்கியபடி காத்திருக்க. வயது வித்தியாசங்களோடு தோண்டி எடுக்கப்படுகின்றன எலும்புக் கூடுகள். வருவார்கள் என்று நாம் காத்திருந்த அனைவருக்கும் பதிலாய் இரத்தமும் சதையுமான இரண்டும் மண்ணோடு மண்ணாய் கலந்துவிட அவர்களின் “கூடுகள்” மாத்திரம் ஊர்வலமாய் வந்து எம் கண்களுக்கு காட்சிதருகின்றன.

! புதைத்தவர்கள் அவர்கள்! தோண்டுபவர்கள் நாங்கள்! இந்தஅவலங்கள் தொடரத் தொடர உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் இதயங்கள் நொருங்கத் தொடங்குகின்றன.

ஆமாம்! வுடக்கில் தொடங்கிய எம்மவர்களைத் தோண்டிக் கண்டுபிடிக்கும் துன்பங்கள் நிறைந்த பணிகள் தொடர்கின்றன..மாங்கனித் தீவி மறுபாதியெங்கும் மயானங்களில் மறைந்து கிடக்கும் மனித எலும்புக் கூடுகள்

பாராளுமன்ற அரசியல்வாதிகள் மௌனமாக இருந்து தங்கள் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்க, உள்ளாட்சி மன்றங்களிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆங்காங்கே குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள். இந்த வரிசையில் மட்டக்களப்பு- சத்துருக்கொண்டான் புதைகுழிகளைத் தோண்ட கோரி மட்டக்களப்பு மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பெற்று:

படுகொலை செய்யப்பட்டவர்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி- அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990-09-09 அன்று சத்துருக்கொண்டான் படுகொலைஇடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய தமிழின படுகொலை நடந்தேறியது. குறிப்பாக யுத்த காலப்பகுதிகளிலே எ மாவட்டத்தில் அப்போது இராணுவ முகாம் அமைக்கப்பட்டது அந்த பகுதியில் பனிச்சையடி, திராய்மடு, பிள்ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண்டான் கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து நகரில் தஞ்சமடைந்து முகாம்களில் தங்கியிருந்தனர்.

இவர்கள் பகலில் தமது கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று வரும் நிலையில் 1990-09-09 அன்று மாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அங்கு இருந்த சிறியோர் தொடக்கம் முதியவர் வரைக்கு 186 பேரை ஒன்றுகூடல் என தெரிவித்து சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிற்கு அழைத்து சென்று இராணுவத்தினருடன் ஊர்காவல் படையினர் இணைந்து அங்கு வைத்து இராணுவ முகாமின் தளபதி வர்ணகுலசூரிய என்பவரின் தலைமையில் துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இந்த படுகொலையின் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அரசால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் பாலகிட்ணன் தலைமையில் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட விசாரணை குழுவிற்கு தப்பி வந்தவர் உட்பட உயிரிழந்தவர்களின் உறவுகள் பலர் சாட்சியங்கள் அளிக்கப்பட்டு இந்த படுகொலை நிரூபிக்கப்பட்ட படுகொலையாக காணப்பட்டது.

இந்த படுகொலை இடம்பெற்று எதிர்வரும் மாதம் 9ம் திகதி 35 ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் இந்த படுகொலைக்கான நீதி இதுவரை மறுக்கப்பட்ட ஒரு பாரிய படுகொலையாக இந்த மாவட்டத்தில் காணப்படுகிறது. இருந்தபோதும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொரு வருடமும் நினைவேந்தலை அனுஷ்டிக்க அமைக்கப்பட்ட நினைவேந்தல் தூபிக்கு வரும்போது பொலிசார் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அச்சுறுத்தல் மத்தியில் அதை தாண்டி அஞ்சலி செலுத்தி வந்தனர்.

இவ்வாறான வடக்கு கிழக்கில் இயங்கிவரும் உள்ளாட்சி மன்றங்கள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களைப் போன்று வெவ்வேறு கட்சிகளில் அங்கம் வகித்தாலும் எமது காணாமற் போன உறவுகள் விடயத்தில் ஒரே குரலாக வடக்கு கிழக்கில் இணைந்து குரல் கொடுக்க வேண்டும்! எலும்புக்கூடுகளை சாட்சிகளாகக் கொண்டு இனப்படுகொலையாளர்களுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.!

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்பந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

ஸ்காபுறோவில் வீடு வாடகைக்கு உண்டு

பெலாமி-எக்ளிங்டன் (Bellamy-Eglinton) சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல் தளத்தில் 3 அறைகளும் ஒரு குளியல் அறை மற்றும் 2 வாகன தரிக்கும் இடங்கள் (Parking) ஆகியவற்றுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. வாடகை 2600 டாலர்கள் மற்றும் ஏனைய கட்டணங்களின் (Bills) அரைவாசியை செலுத்த வேண்டும்.
தொடர்புகளுக்கு:- ரவி 416-988-0965

Job Vacancies - Markham Development Project

Applications are invited for following Job Vacancies at a Development Project in Markham immediately.
* Sales & Administration * Helpers/ Labourers
Successful Applicants should be required to work at Markham Project office.
Contact: 437.601.0450 or Email: sales@gritdevelopments.com

கனடிய செய்திகள் Canadian News

# Conservative Leader Pierre Poilievre Regains Seat in House of Commons by Winning Alberta By-election

Will he pose a serious challenge to
Prime Minister Mark Carney in the Canadian Parliament?



## ஆல்பர்ட்டாவின் ரிவர் – க்ரோ:ஃபூட்டின் இடைத்தேர்தலில் வெற்றியீட்டிய பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக "கலக்க"வுள்ளார்!

### கனடிய பாராளுமன்றத்தில் பிரதமர் மார்க் கார்னிக்கு பலத்த சவாலாகவும் இருப்பாரா?

(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

ஆல்பர்ட்டாவின் ரிவர் - க்ரோ.ஃ.பூட்டின் இடைத்தேர்தலில் 18ம் திகதி திங்கள்கிழமை வெற்றியீட்டிதனால் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்குவார்!

அத்துடன் அவர் எதிர்வரும் நாட்களில் கனடிய பாராளுமன்றத்தில் பிரதமர் மார்க் கார்னிக்கு பலத்த சவாலாகவும் இருப்பார் என அரசியல் விமர்சகர்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

கேம்ரோஸ் - ஆல்பர்ட்டாவின் கிராமப்புற தொகுதியான பேட்டில் ரிவர் - க்ரோ.ஃ.பூட்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் திங்கள்கிழமை பிற்பகுதியில் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே அபார வெற்றி பெற்று கனடியப் பாராளுமன்றத்தில் ஒரு இடத்தைப் பிடித்தார். இதன் மூலம் ஒட்டாவா தொகுதியில் கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த அவருக்காக தனது அல்பேர்ட்டா தொகுதி உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து அவரை மீண்டும் பாராளுமன்றத்தில் அமர்வதற்கு வழிசெய்த கன்சர்வேடிவ் எம்பியான டேமியன் குரேக் பதவி விலகியதால், அந்தத் தொகுதி காலியாகியது. எனவே கடந்த 18ம் திகதி திங்கட்கிழமை இடைத்தேர்தல் நடத்தப்பெற்றது. அதில் 80 சதவீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதனால் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்குவார்!

ஒட்டாவா பகுதி கார்ல்டன் தொகுதியில் பொய்லிவ்ரே தொடர்ச்சியாக ஏழு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் ஏப்ரல் மாதம் லிபரல் தொகுதியில் லிபரல் புரூஸ் .ஃ.பேன்ஜோயிடம் தோல்வியடைந்தார்.

18ம் திகதி திங்களன்று பொய்லிவ்ரே வெற்றிக்குப் பின்னர் ஆற்றிய உரையில் டேமியன் குரேக் பதவி விலகியதால், அந்தத் தொகுதி காலியாகியது. எனவே கடந்த 18ம் திகதி திங்கட்கிழமை இடைத்தேர்தலில் தான் போட்டியிட்டு வெற்றி பெற முடிந்தது. நான் நன்றி தெரிவிப்பதோடு ஆல்பர்ட்டாவில் உள்ளவர்களுக்கு "தாழ்மையான ஊழியராக" இருப்பேன் என்று உணர்ச்சி மேலிட்டவராக உறுதியளித்தார்.

"பேட்டல் ரிவர் - க்ரோ.ஃ.பூட் மக்களை நான் மிகவும் நேசிக்கிறேன்," என்றும் வெற்றி பெற்ற பொய்லிவ்ரே கூறினார், இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் போது தான் செலவு செய்த தனது நேரத்தை நினைவு கூர்ந்தார், வெற்றியீட்டிய பொய்லிவ்ரே தனது உரையின் போது கண்ணீர் மல்கக் கண்களை மூடினார், மேலும் சமூகத்தில் உள்ளவர்களும் "வெற்றிக்கான பாதை ஒருபோதும் நேர்கோடு அல்ல" என்பதை நினைவூட்டியதாகக் கூறினார்.

"எல்லாவற்றிற்கும் மேலாக, கடினமான காலங்களில் நீங்கள் ஒருபோதும் கைவிடக்கூடாது," என்று பொய்லிவ்ரே மேடையில் இருந்து இறங்குவதற்கு முன் கூறினார், இடைத்தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தில் பொய்லிவ்ரேவை "கனடாவின் அடுத்த பிரதமராக வருபவர்" என்று டேமியன் குரே அவரை அறிமுகப்படுத்தினார்.

லிபரல் கட்சியின் கூட்டாட்சித் தேர்தல் வெற்றி மனதை உடைப்பதாக டேமியன் குரே கூறினார், மேலும் பொய்லிவ்ரே இந்தப் பகுதியைப் பிரதிநி-தித்
துவப்படுத்துவதற்காக தனது இடத்தை விட்டுக்கொடுப்பது ஒரு பரிசாக இருக்கும் என்று அவர் நினைத்தார்.

"எங்கள் பிரச்சினைகள் தேசிய அரங்கில் எழுப்பப்படும், ஏனென்றால் இந்த பிராந்தியத்திற்கு ஒரு மெகா.ஃ.போனைக் கொண்டுவருவதில் எங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசியத் தலைவரின் கடுமையான அர்ப்பணிப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஒப்பிடமுடியாதது," என்றும் டேமியன் குரே கூறினார்.

"பியர் பொய்லீவ்ரே வடிவில் எங்களுக்கு ஒரு போராளி இருக்கிறார்." என்றும் தெரிவித்த ஆதரவாளர்கள் வெற்றி பெற்ற கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்குவார்! என்று உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

இரவு முழுவதும் முடிவுகள் வந்தபோது பியர் பொய்லிவ்ரே சுமார் 80 சதவீத வாக்குகளுடன் முன்னிலை வகித்தார்.

"இந்தப் பகுதியில் உள்ள மக்களைத் தெரிந்துகொள்வது எனது வாழ்க்கையின் பாக்கியம்" என்றும் மேற்படி வெற்றி விழாவில் கலந்து கொண்ட மக்களிடம் பொய்லிவ்ரே கூறினார்.

நடந்து முடிந்த மேற்படி இடைத்தேர்தலில் 214 வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பதிவு செய்யப்பட்டனர், அவர்களில் பெரும்பாலோர் கனடிய தேர்தல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி வரும் லாங்கஸ்ட் பேலட் கமிட்டி என்ற எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தனர்.

பேட்டில் ரிவர் - க்ரோ.ஃ.பூட்டுக்கு இன்னும் பல வேட்பாளர்கள் இருந்ததால், வாக்காளர்கள் முதன்முறையாக தங்கள் விருப்பமான வேட்பாளரின் பெயரை வெற்று வாக்குச்சீட்டில் எழுத வேண்டியிருந்தது. வேட்பாளர்களைப் பட்டியலிடும் தடிமனான, சுருள் - கட்டப்பட்ட சிறு புத்தகங்கள் வாக்குச் சாவடிகளில் வழங்கப்பெற்றனன.

கேம்ரோஸில் வசிக்கும் ஸ்டேசி மார்ட்டின், வாக்களிப்பின் இறுதி மணிநேரத்தில் தனது வாக்கைப் பதிவு செய்ய வரிசையில் நின்றார். பொய்லீவ்ரே "எங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த சிறந்தவர்" என்பதால் அவர் அவருக்கு தான் வாக்களித்ததாகக் கூறினார்.

இந்தத் தொகுதியில் 2004 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் கன்சர்வேடிவ்கள் குறைந்தது 80 சதவீத வாக்குகளுடன் வெற்றிகளை ஈட்டி வந்தனர் என்று ஒன்ராறியோவில் உள்ள கல்ப் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரான ஜூலி சிம்மன்ஸ் கூறினார். ஒரே விதிவிலக்காக குரேக், 2021 இல் 71 சதவீத வாக்குகளைப் பெற்றார், ஆனால் ஏப்ரல் மாதத்தில் 83 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இணுவில் திருவூர் ஒன்றியம்-கனடா

கனடா வாழ் இணுவில் மக்களின்

**வருடாந்த ஒன்றுகூடல் – 2025**

-----------------------------------------------------

காலம்: 30-08-2025 (சனிக்கிழமை)
இடம்: L'amoreaux Park
100 Silver Spring Blvd, Scarborough
(Birchmount Rd / McNicoll Ave)
நேரம்: காலை 10.00 மணி

-----------------------------------------------------

சகல வயதினர்க்குமான விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்புகள் மற்றும் கயிறிழுவைப் போட்டிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றது. அறுசுவையோடு விதம் விதமான தாயக உணவுகள் என உண்டு சுவைத்து ஊர் உறவுகளோடு உறவாடி மகிழக் கனடா வாழ் இணுவில் மக்களை இவ்வொன்று கூடலுக்குக் குடும்பத்தோடு வந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.


-----------------------------------------------------

தொடர்புகளுக்கு:
சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு.கிருபாகரன்: (416) 389-7399
பரராசசேகரன் கஜஜெயன்: (416) 732-5898

Tamilthakaval.org

ஒரு இலவச சேவை -- A Free Service

-----------------------------------------------------




இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.
மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.
செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

# 61வது ஆண்டும் நயினை – நல்லூர் பாதயாத்திரை 18ம் திகதியன்று திங்கட்கிழமை ஆரம்பம்!

நயினை முதல் நல்லூர் வரையான வரலாற்று சிறப்புமிக்க பாதாயத்திரை இவ்வருடம் 61வது வருடமாக நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து திங்கட்கிழமையன்று (18-08-2025) ஆரம்பமானது.

அகிலம் போற்றும் அகிலாண்ட நாயகி நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நாகம் தாங்கிய வேல் பவனி கடல் மார்க்கமாக குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்து. பாத யாத்திரிகர்கள் யாழ்ப்பாணம் - புங்குடுதீவு வீதி ஊடாக யாழ். நகரப் பகுதியை வந்தடைந்து நல்லை கந்தன் தேர் உற்சவத்தில் கலந்து கொள்ள இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.







நயினாதிவில் இருந்து புறப்பட்ட யாத்திரை குழுவினர் அன்று புங்குடுதீவில் உள்ள பிரபல்யமான ஆலயங்களை தரிசித்த பின்னர் புங்குடுதீவில் தங்கிருப்பார்கள்.

இரண்டாம் நாள் செவ்வாய்க்கிழமை (19-08-2025) புங்குடுதீவில் இருந்து புறப்பட்டு வேலணை, மண்கும்பான் பகுதிகளில் காணப்படும் ஆலயங்களை தரிசித்து மண்கும்பான் பகுதியில் தங்கியிருப்பார்கள்.

மூன்றாம் நாள் புதன்கிழமை (20-08-2025) அங்கிருந்து புறப்பட்டு நணபகல் யாழ். நகரப் பகுதியில் காணப்படும் சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தை வந்தடைந்தது மாலை சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தில் பஜனை பாசுரங்களை பாடி அங்கு இருந்து யாழ். வில்லுன்றி பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்து அங்கு தரித்து நிற்பார்கள்.

நான்காம் நாளான (21-08-2025) அதிகாலை நல்லை கந்தன் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு தேரின் பின்னே பஜனை பாடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பச்சிளைப்பள்ளி பிரதேச சபை தவிசாளரின் அதிரடியான செயற்பாடு!



பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சோரன்பற்று கிராமத்தில் நீண்ட காலமாக வெள்ள அனர்த்த நிலை காணப்படுவதாக அறிந்த தவிசாளர் அதற்கான தீர்வினை உடனடியாக பெற்று கொடுத்துள்ளார்.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஒவ்வொரு முறையும் வெள்ள அனர்த்தங்களின் போது சோரன்பற்று கிராமத்தில் மக்கள் பெருமளவில் பாதிக்கப் படுகின்றனர். குறித்த வெள்ள அனர்த்த நிலைமைகளின் போது மட்டுமே அதிகாரிகள் வருகை தந்து குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதாகவும் பின்னர் அவற்றை கைவிட்டு சென்று விடுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.



இதனால் தாம் தொடர்ச்சியாக பாதிக்கப் படுவதாக கிராம மட்ட அமைப்புக்கள் பச்சிலைபள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சுப்ரமணியம் சுரேனிடம் தெரிவித்ததை தொடர்ந்து இதற்கான தீர்வினை கால அவகாசம் இல்லாமல் தவிசாளர் உடனடி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

அடுத்த அனர்த்த முன்னாயத்த நிலைமைகளை கருத்தில் கொண்டு குறித்த பிரதேசத்தில் இருந்து வெள்ளம் வடிந்து ஓடக்கூடிய இடத்தை அடையாளப்படுத்தி அமைப்புகளுடன் சேர்ந்து பிரதேச சபை வடிகால் அமைப்பு வசதியை மேற்கொண்டார்.

இவ்விடயங்களை தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார். அவருடன் சபையின் உபதவிசாளர் சிவகுரு செல்வராஜா மற்றும் கிராமமட்ட அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் என்ன பலரும் கலந்து கொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஹர்த்தாலுக்கான அழைப்பின் மூலம் கேலிக்கூத்தாடும் இலங்கை தமிழரசு கட்சி!


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
ILANKAI TAMIL ARASU KADCHI
HEAD OFFICE
No 30, Martyn Road,
Jaffna, Srilanka
14.08.2025
எதிர்வரும் திங்கட்கிழமை 18 ஆம் திகதிய கடையடைப்பு (ஹர்த்தால்) தொடர்பானது
நன்றி
சி.வி.கே. சிவஞானம்
தலைவர்
ம. ஆ. சுமந்திரன்
பொதுச் செயலாளர்
சி.வி.கே. சிவஞானம் தலைவர் தொ.பே: 0212284145
அலுவலகம் தொ.பே: 0212217227 தொலைநகல்: 0212215731
ம.ஆ.சுமந்திரன் PC பொதுச் செயலாளர் தொ.பே: 0112503007 தொலைநகல்: 0212215731 மின்னஞ்சல்: generalsecretaryitak@gmail.com

ஹர்த்தாலுக்கு ஆதரவை திரட்டுமாறு தமிழரசுக் கட்சியின் உயர்மட்டமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் குடைச்சலை கொடுத்து வருவதாக அறியமுடிகிறது.

அதாவது ஹர்த்தாலுக்கு ஆதரவாக ஊடக சந்திப்புகளை நடாத்தியும், வர்த்தக சங்கங்களை சந்தித்தும் இவ்வாறு ஆதரவை திரட்டுமாறு உயர்மட்டமானது கடிதம் மூலம் அறிவித்துள்ளது. அந்த கடிதத்தில் பதில் தலைவரானத சி.வி.கே. சிவஞானம், பதில் செயலாளரான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சகல கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சகல கௌரவ உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும்.

---------------------------------

அன்புடையீர்.

**எதிர்வரும் திங்கட்கிழமை 18 ஆம் திகதிய கடையடைப்பு (ஹர்த்தால்) தொடர்பானது.**

எமது கட்சியினால் மேற்சொன்ன நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது நீங்கள் அறிந்ததே. இதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உங்கள் அனைவரினதும் முழுமையான ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி தவிசாளர்களும் ஊடக சந்திப்புக்களை நடாத்தி சகலரது ஆதரவை கோருவது அவசியமாகும்.

அத்தோடு அனைத்து வணிகர் சங்கங்களையும் சந்தித்து ஆதரவை கோருவதோடு உறுப்பினர்கள் நேரடியாக சந்தைக்கும் கடைக்கும் சென்று இதை செய்வது நல்லது.

கட்சியின் நிர்மானத்தை வலுவாக நிறைவேற்ற உங்கள் முழுமையான பங்களிப்பை எதிர்பார்க்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கடையடைப்புகளை மேற்கொள்ளும்போது வர்த்தக சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளையும் அழைத்து கலந்துரையாடியே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் தற்போது தமிழரசுக் கட்சியானது தன்னிச்சையாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துவிட்டு, தங்களது அழைப்பானது நிராகரிக்கப்படுமோ என்ற அச்சத்தில் இவ்வாறு ஊடக சந்திப்புகளையும், நேரடி சந்திப்புகளையும் நடாத்துமாறு உறுப்பினர்களை கட்டாயப்படுத்துவது கேலிக்கூத்தாக மாறியுள்ளது.



# மண்டைதீவு மனிதப் புதைகுழிக்கு சாட்சியங்கள் உண்டு – வேலணை பிரதேச சபையில் பிரேரணை முன்வைப்பு!

1990 களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப் பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு பகுதி குறிப்பிட்ட சில கிணறுகளில் இருப்பதாகவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருப்பதாகவும் சபையின் உறுப்பினர் பிரகலாதன் கூறியதுடன் இந்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் 20ம் திகதி புதன்கிழமையன்று தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் காலை 10.00 மணிக்கு சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது இதன்போதே இவ்வாறு வலியுதுத்தினார்.

மேலும் செம்மணி புதைகுழி விவகாரம் பூதாகரமாக இருக்கும் இன்றைய சூழலில் வேலணை பிரதேசத்தில் 90 ஆம் ஆண்டு நடைபெற்றதாக கூறப்படும் இந்த புதைகுழியையும் அகழ்வதற்கு அப்பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேச சபையாக இருப்பதால் அதை வலுயுறுத்தவே இந்த விவகாரம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது என்றும் கூறினார்.

இது குறித்து சபையில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த மனிதப் புதைகுழி விவகாரம் காலத்துக்கு காலம் தேர்தல் அரசியல் பேசும் பொருளாக இருப்பதால் இது தொடர்பிலான உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

குற்றவாழிகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வும் பரிகாரமும் வழங்குவது அவசியம் என்றும் உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், பார்த்தீபன், மற்றும் கருணாகரன் நாவலன் ஆகியோர் வலியுறுத்தியிருந்தனர்.

இன்னிலையில் குறித்த ஆதாரங்களுடன் துறைசார் தரபுக்கு அறிக்கை அனுப்பப்ப சபையில் தீர்மானிக்கப்பட்டது.




# யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளது

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் திரையிடப்படவுள்ளது.

யுத்தத்தின்போது தங்கள் அன்புக்குரிய உறவுகளை இழந்தோரின் நினைவுகளை ஞாபகப்படுத்தும் "தடயம்", அக்குபஞ்சர் வைத்தியமுறையின் சாதக பாதகத் தன்மைகளைப் பேசும் "அக்குபஞ்சர்", மலையகத்தில் ஹட்டன் பிரதேசத்தில் களிமண்ணால் மேற்கொள்ளப்படும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான 'Terracotta Jewels', முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களின் கதையான "கொலைக்களம்", நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பிரதேசத்தில் நிகழ்ந்துவரும் யானை மனித முரண்பாட்டை வெளிக்கொண்டுவரும் "வேழம்", திருகோணமலையில் வெல்கம் விகாரை வழியான சிங்கள பௌத்தமயமாக்கத்தைச் சொல்லும் "ஈழம்", மட்டகளப்பு கல்லடி பிரதேச பறங்கியர் சமூக மக்களின் வாழ்வியல் பற்றிய "படிமம்", மஸ்கெலியா பிரதேசசபைக்கு உட்பட்ட கிராமங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் சவால்களை விபரிக்கும் "லயத்துக்குயில்", யுத்தத்தில் உடல் அங்கங்களை இழந்து சிரமத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கையை வாழும் கேப்பாப்பிலவு கிராம மக்களின் பதிவான "ரணம்", மயானங்களில் அவை சார்ந்து சேவைவழங்கும் சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்வியல் சிக்கல்களைப் பதிவு செய்யும் "அறியாப்பாதை" ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.



# இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வியாழனன்று தேரேறி அனைவருக்கும் அருள்பாலித்த நல்லூரான்

- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா 21ம் திகதியன்று வியாழக்கிழமை காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.15 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று ஆறுமுகப் பெருமான் வள்ளி - தெய்வானை சமேதராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



தேர்த் திருவிழாவில் புலம்பெயர்நாடுகள் மற்றும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு ஆறுமுகப் பெருமானின் அருள் காட்சியைக் கண்டுகளித்தனர்.

தேர்த் திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதஷ்டை, அடியழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் எனத் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# வடக்கு, கிழக்கு முதலமைச்சர்களாக முறையே சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் வெற்றிபெறவே இந்த இந்த ஹர்த்தால் "நாடகம்" என்கிறது அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ்



வடக்கு கிழக்கில் தமிழரசு கட்சியினால் அறிவிக்கப்பட்டு, முன்னெடுக்கப் பட்டதான ஹர்த்தாலின் பின்னணியில் ஏம்.சுமந்திரனை வடமாகாண முதலமைச் சராகவும் இரா. சாணக்கியன் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் கொண்டுவரும் நோக்கில் இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாநகர மேயர் கடைகளை மூடுமாறு அடாவடியாக செயற்பட்டதை ஒருபோது எற்றுக்கொள்ள முடியாது என அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் தலைவர் சிவதர்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெய்ஸ் ஒப் மீடியா கற்கைநிலையத்தில் 18ம் திகதி திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமந்திரனாலும் சாணக்கியனாலும் அறிவிக்கப்பட்ட ஹார்த்தாலானது இந்த நேரத்தில் தேவையில்லாத ஒன்று என்பதுடன் மக்களால் நிராகரிக்கப்பட்ட சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரின் அரசியல் சுய இலாபத்திற்க்காகவே இது முன்னெடுக்கப்பட்டதாகவே நாம் பார்க்கிறோம்.

ஒரு போதைபொருள் வியாபாரி இராணுவத்தினரால் அடித்து கொல்லப் பட்டட்டுள்ளார். அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நீதித்துறை இருக்கின்றது. இவர்கள் யார் அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க.

மட்டக்களப்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டிற்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோத்தரால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவ்வாறு ஒரு சம்பவம் கிழக்கில் இடம்பெற்றிருந்தது அப்போது தமிழரசு கட்சி எங்கே போனது, ஜனாதிபதி சட்டத்தரணியாக இருந்த சுமந்திரன் எங்கே போனார்? ஏன் அப்போது இங்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அவர் நீதியை பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை, ஹார்த்தாலும் முன்னெடுக்க ப்படவில்லை.

முந்தையங்காட்டில் ஒரு இளைஞன் கொல்லப்பட்டார் என்ற காரணத் திற்காக வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தை வெளியேறுங்கள் என்று சுமந்திரன் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டில் ஈஸ்டர் தாக்குதல் என்ற ஒரு கோர சம்பவம் நடந்தது. அந்தநேரத்தில் தமது முழுமையான பங்களிப்பை வழங்கி, நாட்டிற்கு பாதுகாப்பை வழங்கியவர்கள் அவர்கள். அவர்களை வெளியேறுங்கள் என்று சொல்லி அவர்கள் வெளியேறிவிட்டால் அது இனப்பிரச்சினையை தோற்றுவிக்க வாய்ப்புள்ளது.

எனவே சுமந்திரன் சார்ந்த தமிழரசு கட்சியினருக்கு போலி தேசியம் பேசி மக்களை ஏமாற்ற மட்டுமே தெரியும் என்பதுடன் வடக்கு கிழக்கில் முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ள எம்.சுமந்திரனும் இரா.சாணக்கியனும் ஆடும் அரசியல் நாடகங்கள் மேற்கொள்ளவதற்காகவே வடக்கு கிழக்கில் ஹர்த்தால்.

அதேவேளை மட்டக்களப்பில் திறந்த கடைகளை மூடுமாறு மட்டு மாநகர சபை முதல்வர் வர்தகர்களை வற்புறுத்தியமை ஏற்கமுடியாது ஒன்று எனவே இந்த செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

# தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசுடன் இலங்கையின் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் பிரதீப் சந்திப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (21.08.2025)

தமிழ் நாட்டின் நிதி மற்றும் சுற்றுச் சூழல் கால நிலை மாற்ற அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் தமிழகம் சென்றுள்ள இலங்கை பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோருக் கிடையில-ான சந்திப்பு 21ம் திகதியன்று சென்னையில் இடம் பெற்றது.

இதன் போது இலங்கை தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக மலையக மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்பு பற்றி பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது.

மலையக மக்களின் கலை, இலக்கிய, சமூக, பொருளாதார விடயங்கள் பற்றியும் அமைச்சர் அவர்களுடன் காத்திரமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது பிரதியமைச்சர் பிரதீப்புடன் சமூக ஆர்வலர் விக்கிரமசிங்கவும் இணைந்திருந்தார்.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரிலும் தபாலக ஊழியர்கள் பணி பஸ்கரிப்பு தொடர்சியாக பொது மக்கள் பாதிப்பு






20.08.2025

நாடு தழுவிய ரீதியில் தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் இடம் பெற்று வருகின்ற நிலையில் மன்னார் மாவட்ட தபாலக செயற்பாடுகள் முழுமையாக இடம் பெறவில்லை என்பதுடன் தபாலக சேவைய பெற வந்த பொது மக்களும் பல்வேறு இடைஞ்சலுக்கு உள்ளாகியமையை அவதானக்க கூடியதாக இருந்தது.

19 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழை (18ம் திகதி) மாலை தொடங்கிய வேலைநிறுத்தம் தொடர்ந்து மூன்றாவதுு நாளாக இடம் பெற்றுவரும் நிலையில் தொடர்சியாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக தண்டப்பணம் செலுத்துதல், கொடுப்பனவுகள் பெறுதல், நீர் மின்சார கட்டணம் செலுத்துதல், பொதிகள் அனுப்பு சேவைகளை பெற வருகை தந்த பொதுமக்கள் தொடர்சியாக தங்களது சேவையை பெற முடியாத நிலை காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை க்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு



## உரிய அமைச்சர்களுடன் கலந்துரையாடி தீர்வைக் காண்பதற்கு உறுதி?

- எஸ்.ஆர்.லெம்பேட் (19-08-2025)

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை. ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் 18ம் திகதி திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விசேட சந்திப்பு குறித்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்றைய தினம் (18.08.2025) திங்கள் கிழமை மன்னார் ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் ஆயர் அவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினை, மின்சக்தியை பெறுவதற்காக மன்னாரில் காற்றாலை அமைக்கும் செயற்பாடுகளால் எழுந்துள்ள பாரிய பாதிப்புக்கள், வடக்கு மாகாண அரசாங்கத்தின் கீழ் உள்ள மன்னார் பொது வைத்திய சாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டியதன் அவசியம் போன்ற விடயங்கள் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப் பட்டன.

கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினைகளையும் அதனால் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பாதிப்புக்களையும் ஆயர் அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கியபோது அச் செயற்பாடு முற்றாக நிறுத்தப்படும் என ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார்.

மின் சக்தியை பெறுவதற்காக மன்னாரில் காற்றாலை அமைக்கும் செயற்பாடுகளால் எழுந்துள்ள பாரிய பாதிப்புகள், இத்திட்டத்திற்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன், குறிப்பாக மக்களுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அரசாங்கத்தின் கீழ் உள்ள மன்னார் பொது வைத்திய சாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை ஆயர் அவர்கள் வலியுறுத்திய போது இது தொடர்பாக உரிய அமைச்சர்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்துள்ளார். என அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னாரில் காற்றாலை, கணிய மணல் அகழ்வுக்கு எதிராக 17 வது நாளாக தொடரும் போராட்டம்

## பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்கள், மீனவர்கள் பங்கேற்பு

### ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும்-மக்கள் எச்சரிக்கை

- எஸ்.ஆர்.லெம்பேட் (18-08-2025)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (19ம் திகதி) 17 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்தில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு அன்றையதினம் (19) செவ்வாய்க்கிழமை ஆதரவு வழங்கும் வகையில் பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுன் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.

குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளதோடு, ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரித்துள்ளனர்.

# மக்களை கொன்று விட்டு மின்சாரம் எதற்கு? மன்னாரில் காற்றாலை கணிய மணல் அகழ்வுக்கு எதிராக 19வது நாளாக தொடரும் போராட்டம்

## மன்னார் தனியார் பேருந்து உரிமையாளர்கள், முச்சக்கர வண்டி சங்கத்தினர் ஆதரவு




- எஸ்.ஆர்.லெம்பேட் (19-08-2025)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் 21ம் திகதி அன்றைய தினம் வியாழன் 19 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க உறுப்பினர்கள் மற்றும் மன்னார் முச்சக்கர வண்டி சங்கத்தினர் ஆதரவு வழங்கிய நிலையில் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது.போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அன்றைய தினம் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற குறித்த போராட்டத்தின் போது வெளிநாட்டு பிரஜை ஒருவர் கலந்து கொண்டு மக்களின் போராட்டம் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக் கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளனர்.

போராட்டத்தை தொடர்ந்து மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இருந்து மாவட்ட செயலகம் வரை ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது.

## Mississauga Creations Celebrated it's 20 Years of Tamil Theatre Excellence in Canada

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் மிசிசாகா க்ரியேஷன்ஸ் — 20 ஆண்டுகளின் வெற்றிகரமான மேடை நாடகப் பயணம்









- ரொறன்ரோவிலிருந்து சத்தியன்

கனடாவில் நாடகக் கலைஞரும் இயக்குனருமான பார்த்தா சங்கரா அவர்களினால் ஆரம்பிக்கப்பெற்ற "மிசிசாகா க்ரியேஷன்ஸ்" மேடை நாடக அமைப்பானது தனது 20 ஆண்டுகளின் வெற்றிகரமான மேடை நாடகப் பயணத்தின் வெற்றியை சிறந்த மேடை நாடகங்கள் மூலம் கொண்டாடி மகிழ்ந்தது.

2025 ஆகஸ்ட் 9ம் தேதி, சனிக்கிழமை, மிசிசாகா Meadowvale Theatre அரங்கில், "Mississauga Creations 20th Celebrations" சிறப்பு விழாவிற்கு பல துறைசார்ந்த வெற்றியாளர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்கள். அவர்களில் பலர் மிசிசாகா க்ரியேஷன்ஸ் நாடக அமைப்பிற்கும் அதன் நிறுவனர் பார்த்தா சங்கரா அவர்களுக்கும் தங்கள் ஆதரவை கடந்த காலங்களில் வழங்கி வந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த இருபது ஆண்டுகளாக, பார்த்தா சங்கரா தொடங்கி நடத்தி வரும் இந்த தமிழ் நாடகக் குழு, தனது சொந்தக் கதைகள், இயக்கம், நடிப்பு மூலம் கனடாவில் உள்ள தமிழ் மக்களை கவர்ந்து வருகிறது. அத்துடன் தமிழகத்தின் நாடகப் பாணியில் பல நகரங்களில் பேச்சு வழக்கில் உள்ள மொழிசார்ந்த உரையாடல்களை உள்ளடக்கி நாடகங்களை வழங்கிவருவதால் அவற்றின் மூலம்





ரசிகர்கள் "நல்ல நாடகங்களை சென்னை மேடைகளில் பார்த்து மகிழ்வது போன்று கனடாவில் இருந்து கொண்டே ரசித்து மகிழ்வதற்கு சந்தர்ப்பமாகவும் அமைந்தது. அத்துடன் நகைச்சுவை அதிகளவில் கலந்து உரையாடல்களுடன் வெளிப்பட்டதும் ரசிகர்களுக்கு இரட்டை மகிழ்ச்சியாக அமைந்தது.

அன்றைய நாடக விழா நிகழ்ச்சியானது பார்த்தா சங்கரா, வழங்கிய 11 முன்னைய நாடகங்கள் கொண்ட ஒரு அழகான ஆடியோ-விசுவல் தொகுப்புடன் ஆரம்பமாகியது. பழைய நாடகங்களை பார்த்து பலருக்கும் இனிய நினைவுகள் வந்தன. அதன் பிறகு, பார்வையாளர்கள் ஆவலுடன் காத்திருந்த புதிய நகைச்சுவை நாடகம் "Sing & Bung" வெளியிடப்பட்டது. இது பார்த்தா அவர்களின் பன்னிரண்டாவது அசல் கதை என்பது குறிப்பிடத்க்கது . வழக்கம்போல சிரிப்பும் சுவையும் நிரம்பிய நாடகமாய் இருந்தது.

மேற்படி நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்தவர், சென்னை "Crazy Creations" நாடக அமைப்பின் நிறுவனர் திரு. மாது பாலாஜி என்பது ரசிகர்களை பெரிதும் மகிழ்வித்தது.

அதன் பின், பல முக்கிய விருந்தினர்கள் வாழ்த்துரை வழங்கினர்:

- திரு. பாஸ்கரன் ராஜமாணி, முன்னாள் சீனியர் பார்ட்னர், Delotte Canada
- திரு. லோகன் என். லோகேந்திரலிங்கம், கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர்
- திரு. கிருஷ்ணா சங்கர், கலாலயா மற்றும் Direction FX நிறுவனர்
- டாக்டர் வி. ரகுராமன், மனநல மருத்துவர் மற்றும் மேடை கலைஞர்
- திரு. ஹரி ராகவன், தொழிலதிபர், முதலீட்டாளர் மற்றும் நன்கொடையாளர்

இவ்விழாவின் சிறப்புப் பேச்சாளராக, சென்னை "Crazy Creations". இன் திரு. மாது பாலாஜி வந்திருந்தார். அவர் அளித்த முக்கிய உரை அனைவரையும் கவர்ந்தது. அதற்கு பின், அவர் பிரபலமான Nil Gavani Crazy உரையாடல் நிகழ்ச்சியையும் நடத்தி, அரங்கையே சிரிப்பால் நிறைத்தார்.

அன்றைய விழா மண்டபம் நிறைந்திருந்தது. 395 பேருக்கு டிக்கெட்கள் விற்கப்பெற்று விற்று நிரம்பிய அரங்கு, தமிழ் நாடக மேடைக் கலைக்கு மக்கள் தரும் அன்பையும் ஆதரவையும் காட்டியது. விழாவைப் பற்றி பார்த்தா சங்கரா அவர்களின் உருக்கமான உரை பின்வருமாறு அமைந்தது:

"இருபது ஆண்டுகளாக நம்ம சமூகத்துக்கு சிரிப்பும் கலைச் சுவையும் கொடுக்க முடிந்தது ஒரு பெருமை. இந்த ஆர்வப் பயணம் தொடரும். இன்னும் நிறைய கதைகளும், சிரிப்பும், சந்தோஷமும் நம்ம அரங்கில் வரும்."

20 வருடப் பயணத்தை முடித்து, ஆளைளளைளயரபய ஊசநயவழைளெ அடுத்த கட்டத்துக்கு செல்லும் நிலையில், ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது - திரை மீண்டும் மீண்டும் உயர்ந்து, மகிழ்ச்சி, பண்பாடு, மற்றும் ஒற்றுமையைக் காட்டிநின்றது.

### Mississauga Creations Marks 20 Years of Tamil Theatre Excellence !!

On Saturday, August 9th, 2025, the Tamil theatre community in Mississauga came together at Meadowvale Theatre to celebrate a remarkable milestone — Mississauga Creations 20th Anniversary Celebrations. Founded by Partha Sankara, the group has been a pillar of Tamil stage drama in Canada for the past two decades, delighting audiences with original productions written and directed by Partha and performed by its dedicated team.

The evening began with a nostalgic audiovisual medley featuring highlights from the group's eleven past productions, bringing back fond memories for long-time patrons. This was followed by the much-anticipated inauguration of the brand-new comedy play, Sing & Bung — Partha's twelfth original script, which promises to carry forward the group's tradition of witty storytelling and engaging performances.

The celebration was further enriched by heartfelt felicitations from distinguished guests, including:

• Mr. Baskraran Rajamani, Senior Partner (Retired), Deloitte Canada.
• Mr. Logan N. Logendralingam, Editor-in-Chief, Uthayan Newspaper
• Mr. Krishna Sankar, Founder, Kalalaya and Direction FX
• Dr. V. Raghuraman, Professional Psychiatrist and Theatre Personality
• Mr. Hari Raghavan, Entrepreneur, Investor, and Philanthropist


The highlight of the evening was the presence of the Chief Guest, Mr. Maadhu Balaji of Crazy Creations, Chennai, India. His inspiring keynote address was followed by his signature talk show, Nil Gavani Crazy, which had the audience in splits.

With a sold-out crowd of 395 people, the celebration was a testament to the enduring love the community has for Tamil theatre. Reflecting on the journey, Partha shared, "It is heartening to know we have been able to entertain the community for twenty long years. This journey of passion continues, and we look forward to bringing more laughter, stories, and connections to our audiences."

As Mississauga Creations steps into its next chapter, one thing is certain — the curtain will keep rising on more moments of joy, culture, and community spirit.


Skandavarodaya Old Students' Association - Canada
ஸ்கந்தவரோதயா பழைய மாணவர் சங்கம் - கனடா
Summer Get - Together 2025 & Annual General Meeting
August 30, 2025, Sunday 10 am
Milliken Park Picnic Site 2
5555 Steeles Ave. East, Scarborough (McCowan & Steeles)
Contact:
Jeyadevi 647 454 9617
Judita 416 402 4495





Lots of Games, Prizes & Food
For A fun filled day, Please Join us
with your Family and friends







# கடையடைப்பு: வெற்றியா தோல்வியா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

தமது கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் உள்ளூராட்சி சபைகளை வைத்துக்கொண்டு கடையடைப்பை இலகுவாக அமுல்படுத்தலாம் என்று சுமந்திரன் சிந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை. அது முழுமையாகத் தோற்கவும் இல்லை முழுமையாக வெற்றி பெறவும் இல்லை. குறிப்பாக மக்கள் அதிகமுடைய யாழ்ப்பாணத்தில் அது பெருமளவுக்குச் சொதப்பிவிட்டது. கிழக்கில் ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. வன்னியிலும் அது பாதி வெற்றி, பாதி தோல்வி என்ற நிலைமைதான்.

இப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்று சுமந்திரன் திட்டமிட்டு உழைத்தார். கடையடைப்பை எந்த விலை கொடுத்தாவது வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவரும் அவருடைய அணியும் சகல மாவட்டங்களிலும் கடுமையாக உழைத்தனர். வெற்றியைக் குறித்த சந்தேகங்கள் இருந்த காரணத்தாலும் விமர்சனங்களின் விளைவாகவும் கடையடைப்புக்கு நேர வரையறையையும் அறிவிக்க வேண்டிவந்தது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு கடையடைப்பு பூரண வெற்றி பெறத் தவறியது.

உண்மையில் இது தமிழரசுக் கட்சியின் அல்லது சுமந்திரனின் போராட்டம் அல்ல. முழுத் தமிழ் மக்களும் இனமாகப் போராட வேண்டிய விடயம் இது. முல்லைத்தீவில் இறந்த இளைஞர் யார்? அவர் இறப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது யார்? இதில் படைச் சிப்பாய்களுக்கும் அவருக்கும் இடையில் இருந்த உறவு என்ன? போன்ற விடயங்களைத் தனியாக ஆராயலாம். தமிழ்ப் பகுதிகளில் முகாமிட்டிருக்கும் படையினருக்கும் அந்த படை முகாம்களை அண்டியிருக்கும் பகுதிகளில் வாழும் ஒரு பகுதி குற்றவாளிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இது ஒருவகையில் குற்றப் பின்னணியைக் கொண்ட தொடர்புதான். தமிழ்ப் பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில குற்றவாளிகள் படைத்தரப்பினரோடு பல்வேறு வகையான உறவுகளைக் கொண்டிருக்கின்றார்கள். போதைப்பொருள் விநியோகம், பாலியல் தொழில், அரச சொத்துக்களைக் கள்ளமாக விற்பது போன்ற பல விடயங்கள் இதில் சம்பந்தப்படுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் போதைப்பொருள் வலைப் பின்னலும் இப்படிப்பட்டதுதான் என்ற குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார்கள்.

முல்லைத்தீவில் சம்பந்தப்பட்ட இளைஞர் வாழும் குடியிருப்பு ஜீவன் குடியிருப்பு என்று அழைக்கப்படுகிறது. வறிய அக்குடியிருப்பைச் சேர்ந்த ஒரு சிறு பகுதியினர் முத்தையன் கட்டுப் பகுதியிலுள்ள படை முகாமோடு தொடர்புகளை ஏற்கனவே வைத்திருக்கிறார்கள். இந்த தொடர்புகளின் விளைவாகத்தான் அந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இந்தக் குற்றப் பின்னணியை வைத்துக்கொண்டு இதில் அரசியல் இல்லை, அந்த இளைஞரின் மரணம் கொலை அல்ல, இதில் படையினர் குற்றவாளிகள் இல்லை, என்பது போன்ற விளக்கங்களை ஒரு பகுதி தமிழர்களும் தமிழர்களே எழுதி வருகிறார்கள். சுமந்திரனை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு அல்லது கடையடைப்பை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டும் ஒரு பகுதி அரசியற் செயற்பாடடாலர்களும் அவ்வாறு எழுதி வருகிறார்கள். அது தவறு. அங்கே ஓர் அடிப்படை உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் ஒரு படை முகாம் இருந்த காரணத்தால்தான் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கே ஒரு படை முகாம் இருந்தமை என்பது தமிழ் நோக்கு நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கான ஒரு படை முகாம்தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. எனவே தமிழ்ப் பகுதிகளில் படையினரின் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் பார்த்தால் அங்கே அந்த முகாம் இருந்ததை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த முகாம் அங்கு இருந்தபடியால்தான் அந்தக் குற்றச்செயல் இடம்பெற்றது. எனவே அடிப்படைக் காரணம் படைப்பிரசன்னம்தான். தமிழ்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நோக்கத்துக்காக படையினர் நிலை கொண்டிருப்பதுதான்.

இந்த அடிப்படையில் பார்த்தால், அந்தப் படைப் பிரசன்னத்திற்கு எதிராக சுமந்திரன் அழைத்த போராட்டம் சரி. கடையடைப்பு என்று போராட்டம் சரியாக இல்லையா என்ற விவாதம் ஏற்கனவே தமிழ் அரசியல் பரப்பில் ஆழமாக நடந்திருக்கின்றது. கடையடைப்பு அல்லாத வேறு போராட்ட வடிவங்களை தமிழரசுக் கட்சி யோசித்திருக்கலாம். அப்படி யோசிப்பதற்கு தேவையான போராட்டப் பாரம்பரியம் அவர்களிடம் இல்லை என்று கூற முடியாது. 1950 களில் தந்தை செல்வாவின் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்த ஒரு கட்சி. அந்த சத்தியாகிரகத்தில் அடி வாங்கிய ஒரு கட்சி. ஆனால் அங்கிருந்து இன்று வரை கிட்டத்தட்ட 75 ஆண்டுகலின் பின்னரும் ஒரு புதிய போராட்ட வடிவத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பொருத்தமான காரணங்களுக்காக, பொருத்தமான விதங்களில் போராட வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அந்தக் கட்சியிடம் இல்லை என்பதால்தான் அவர்கள் நமத்துப்போன போராட்ட வடிவங்களைத் தெரிவு செய்கிறார்கள். அந்த அடிப்படையில் கடையடைப்பை விமர்சிக்கலாம். ஆனால் படைப் பிரசன்னத்துக்கு எதிராக நடந்த ஒரு போராட்டத்தை விமர்சிக்கத் தேவையில்லை.

அது தமிழரசுக் கட்சி, சுமந்திரன், சிவஞானம் மட்டுமல்ல ஏனைய எல்லாக் கட்சிகளும் இணைந்து போராடியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். அது முழுத் தமிழ் இனத்துக்குமான ஒரு போராட்டம். எனவே கட்சி கடந்து இனமாகத் திரண்டு நடத்தியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். ஆனால் அவ்வாறு கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை என்பதுதான் தமிழ் அரசியலில் உள்ள மிகப்பெரிய சாபக்கேடு.

கட்சி கடந்து இனமாகத் திரள முடியாத அளவுக்குத் தமிழ் அரசியல் பரப்பு தொடர்ந்து சிதறிக் காணப்படுகிறது. 16 ஆண்டுகளுக்குப் பின்னரும் குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை மேலும் நீர்த்துப்போகக்கூடிய ஆபத்துக்கள் அதிகமாகத் தெரியும் ஒரு அரசியல் சூழலில் கூட, தமிழ் மக்களால் ஒன்றாகத் திரண்டு, ஒரு இனமாக ஒரு முக்கிய விடயத்துக்கு எதிராகப் போராட முடியவில்லை.

படைப் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற ஒரு போராட்டத்தில் மட்டுமல்ல, சில கிழமைகளுக்கு முன் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுத வேண்டும் என்ற விடயத்திலும் அவ்வாறு தமிழ்த் தரப்பானது, கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை.

அந்தக் கடிதத்தை எழுத வேண்டும் என்று முதலில் தொடங்கியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். அந்தக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து அந்தக் கடிதத்தை எழுதிய பின் தமிழரசுக் கட்சியிடம் அதில் கையெழுத்திடுமாறு கேட்டன. அந்த கடிதத்தில் திருத்தங்கள் செய்வதாக இருந்தால் தமிழரசுக் கட்சி கேட்கும் திருத்தங்களைச் செய்வதற்குத் தாங்கள் தயாராக இருந்ததாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. கடிதத்தின் முதல் வரைவை தமிழரசுக் கட்சியின் பிரதானிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவிட்டு கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் பொறுத்திருந்ததாகவும் கஜேந்திரக்குமார் ஓர் ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடுவதில்லை என்ற முடிவை ஐந்து நாட்களின் பின் அறிவித்தது. அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். ஆனால் எல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான காரணம் உண்டு. அதுதான் ஏற்கனவே கூறப்பட்டது போல இந்த விடயம் இனமாக திரண்டு எதிர்கொள்ள வேண்டிய ஒன்று என்பது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒரு இனமாக நின்று, ஐநாவுக்கு, ஐநாவில் முடிவுகளை எடுக்கும் நாடுகளுக்கு, ஒரு செய்தியைக் கூற வேண்டிய இடம் அது. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை. அதற்குப் பெரும்பாலும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பு.

ஏனென்றால் தமிழரசுக் கட்சி தமது அரசியல் எதிரிகள் மீது மட்டுமல்ல தமிழ்ச் சிவில் சமூகங்கள் மீதும் ஒருவித வெறுப்போடு காணப்படுகிறது. இந்தக் கடிதம் எழுதும் நகர்வை முன்னெடுத்த சிவில் சமூகங்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சி ஒருவித ஒவ்வாமை உணர்வோடு காணப்படுகிறது. இந்த ஒவ்வாமை உணர்வு இப்பொழுதுதான் ஏற்பட்ட ஒன்று அல்ல. சிவில் சமூகங்கள் தனக்கு எதிராக செயல்படுவதாக தமிழரசுக் கட்சி நம்புகின்றது.

சிவில் சமூகங்கள் தனது அரசியல் எதிரியாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துகின்றன என்றும் அது நம்புகின்றது. எனவே சிவில் சமூகங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் தன்னைப் பலவீனப்படுத்துவதற்கு என்று அக்கட்சி நம்புகின்றது.

தமிழ் மக்கள் பேரவையில் தொடங்கி தமிழ்ப் பொது வேட்பாளர் வரையிலும் சிவில் சமூகங்கள் தனது முதன்மையை சோதனைக்கு உள்ளாக்குவதாக தமிழரசுக் கட்சி பயப்படுகின்றது. அந்த அடிப்படையில்தான் ஐநாவிற்கு எழுதப்பட்ட கூட்டுக் கடிதத்திலும் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போட விரும்பவில்லை. இதை தமிழரசுக் கட்சியின் முடிவு என்றுகூடச் சொல்ல முடியாது. அது பெருமாளவிற்கு சுமந்திரனின் முடிவுதான். அந்த முடிவை அவர் சிவஞானத்தையும் வைத்துக் கொண்டு சொன்னார். அந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேறு சிந்தனைகளும் வேறு அபிப்பிராயங்களும் உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுடைய குரல் வெளியே ஒலிப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் சுமந்திரனின் பக்கம் நிற்கின்றார்கள் என்றிருந்தால் நடந்து முடிந்த கடையடைப்பு முழு வெற்றி பெற்றிருக்கும். ஏனென்றால் வடக்கு கிழக்கு தழுவிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரே கட்சி தமது கட்சிதான் என்று சுமந்திரன் அடிக்கடி கூறுவார். அப்படிப் பார்த்தால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு கடை அடைப்பை ஏன் முழுமையாக வெற்றிகரமாக நடத்த முடியவில்லை?

கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் கொண்டாடுவதாகத் தெரிகிறது. அது தவறு. அது கொண்டாடப்பட வேண்டிய விடயம் அல்ல. ஏனென்றால் ஒரு இனமாக சிந்தித்து, எல்லாருமாகச் சேர்ந்து போராட வேண்டிய ஒரு விடயம். கடையடைப்பு முழு வெற்றி பெறாததை வைத்து அரசாங்கம் தனது படைகளை விலக்கிக் கொள்ளாது என்று கூறப்படும் விளக்கம் குதர்க்கமானது. அதேசமயம் கடையடைப்பை சுமந்திரன் செய்கிறார் என்பதற்காக அவருடைய அரசியல் எதிரிகள் அது தோற்க வேண்டும் என்று பிராத்தித்ததோ அல்லது அது முழு வெற்றி பெறவில்லை என்பதை பார்த்து திருப்திபடுவதோ தமிழ் மக்கள் ஒரு இனமாகத் திரளமுடியாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகின்றது.

அதாவது கடந்த இரண்டு மாதங்களுக்குள் தமிழ் மக்கள் தாங்கள் ஒரு இனமாகத் திரள முடியாமல் சிதறிப் போய் இருக்கிறார்கள் என்பதனை இரண்டு தடவைகள் நிரூபித்திருக்கிறார்கள். இதை மேலும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், தமிழ் மக்கள் வெற்றி பெறத் தேவையான அடிப்படைத் தகுதியைப் பெறாத மக்களாகத் தொடர்ந்து மிருக்கிறார்கள் என்பதனை கடந்த இரண்டு மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் நிரூபித்து விட்டார்கள் என்றும் சொல்லலாமா?

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






Toronto சிட்டி கவுன்சிலர்

## PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
**விலங்கு சேவைகள்**
உயர்மாடி கட்டட சட்டங்கள்
**கட்டட அனுமதி பத்திரங்கள்**
பிள்ளை பராமரிப்பு சலுகை
**அவசர வீட்டு வசதிகள்**
தீயணைப்பு சேவைகள்
**கழிவுப் பொருட்கள் சேவை**
நூலகச் சேவை
**மாநகரத் தேர்தல்**
மாநகர அனுமதியும் சட்டங்களும்

**Ontario Works**
வாகனத் தரிப்பிடங்கள்
**பூங்காக்கள்**
காவல் துறை
**பொதுச் சுகாதாரம்**
வீதிகள்
**ஆதன வரிகள்**
பொதுப் போக்குவரத்து
**மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்**
மரங்கள்
**நீர் விநியோகம்**

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**

NISSAN **VILLAGE NISSAN**

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

# ALL-IN CLEAROUT EVENT






**SajanthanVijayakumar**
Brand Ambassador
647.631.9054
saj@villagenissan.com

NISSAN **VILLAGE NISSAN**
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com

**Prajath Nageswaran**
Brand Ambassador
416-879-7410
Prajath@villagenissan.com



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND

INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

# INSURE. SAVE. PROTECT

My 20+ years of experience as a Life Insurance Advisor will allow me to serve you better! Discuss with us your Insurance Needs, and we will recommend the right insurance based on your needs.



## Life Happens, Ensure You Are Prepared

If you have a family, Life Insurance is especially important but if you cannot afford Permanent Life Insurance (whole life) right now, term life insurance is the affordable and flexible alternative. If you happen to die (God forbid) within the term, the amount of insurance you are insured for will be paid to your beneficiary - wife, children, or anyone you choose such as your parents or siblings.

**Available Terms are - Term 10, 15, 20, 25, 30, 35 and 40.**
**Premium for the Term is guaranteed to remain the same for the term selected**
**Term insurance is available from Age 0 – 75 | Coverage available until age 85**

**Coverage available from $10,000 to $5,000,000**
**Also, Term Insurance for New Immigrants, Skilled Workers, Caregivers, Refugees, Visitors & Students is also available.**

# LIFE INSURANCE

*COMPARE & SAVE UPTO 50%...LOWEST RATE GUARANTEED!*

# MORTGAGE INSURANCE

**10 YEAR TERM** (Renewable & Convertible) Premium remains same for 10 years.

| MALE AGE | $100,000 | $250,000 | $500,000 | FEMALE AGE | $100,000 | $250,000 | $500,000 |
|---|---|---|---|---|---|---|---|
| | MONTHLY PREMIUMS | | | | MONTHLY PREMIUMS | | |
| 30 | $ 9 | $11 | $20 | 30 | $7 | $10 | $13 |
| 35 | $ 9 | $11 | $20 | 35 | $7 | $10 | $14 |
| 40 | $10 | $14 | $27 | 40 | $8 | $11 | $18 |
| 45 | $13 | $23 | $33 | 45 | $11 | $16 | $23 |
| 50 | $19 | $36 | $53 | 50 | $14 | $25 | $37 |
| 60 | $44 | $85 | $153 | 60 | $35 | $65 | $107 |

**Compare your mortgage insurance rates and save!**

**20 YEAR TERM** (Renewable & Convertible) Premium remains same for 20 years.

| Male AGE | $100,000 | $250,000 | $500,000 | Female AGE | $100,000 | $250,000 | $500,000 |
|---|---|---|---|---|---|---|---|
| | MONTHLY PREMIUMS | | | | MONTHLY PREMIUMS | | |
| 30 | $ 10 | $ 15 | $ 25 | 30 | $ 9 | $13 | $20 |
| 35 | $ 11 | $ 19 | $ 30 | 35 | $10 | $15 | $22 |
| 40 | $ 14 | $ 26 | $ 38 | 40 | $11 | $20 | $33 |
| 45 | $ 20 | $ 41 | $63 | 45 | $16 | $30 | $49 |
| 50 | $ 31 | $ 59 | $106 | 50 | $25 | $47 | $75 |
| 60 | $ 82 | $ 162 | $319 | 60 | $63 | $151 | $221 |

**Coverage available from $10,000 to $5,000,000**

**Term 100** Premium remains same until age one hundred

| Male AGE | $100,000 | $250,000 | $500,000 | Female AGE | $100,000 | $250,000 | $500,000 |
|---|---|---|---|---|---|---|---|
| | MONTHLY PREMIUMS | | | | MONTHLY PREMIUMS | | |
| 30 | $54 | $127 | $245 | 30 | $49 | $111 | $207 |
| 35 | $71 | $158 | $306 | 35 | $64 | $137 | $262 |
| 40 | $86 | $197 | $385 | 40 | $74 | $172 | $329 |
| 45 | $109 | $257 | $494 | 45 | $93 | $218 | $420 |
| 50 | $130 | $320 | $619 | 50 | $114 | $279 | $536 |
| 60 | $198 | $475 | $935 | 60 | $165 | $393 | $775 |

**Available Terms: Term 10, T15, T20, T25, T30, T35, T40**

**Whole life 20 pay** This is Permanent Insurance. Pay only for 20 years, and you are covered for life, with guaranteed cash value!

| MALE AGE | $100,000 | $250,000 | $500,000 | Female AGE | $100,000 | $250,000 | $500,000 |
|---|---|---|---|---|---|---|---|
| | MONTHLY PREMIUMS | | | | MONTHLY PREMIUMS | | |
| 30 | $100 | $227 | $446 | 30 | $88 | $207 | $389 |
| 35 | $123 | $289 | $541 | 35 | $105 | $249 | $480 |
| 40 | $142 | $333 | $655 | 40 | $127 | $302 | $589 |
| 45 | $177 | $416 | $812 | 45 | $153 | $361 | $678 |
| 50 | $224 | $523 | $1017 | 50 | $182 | $428 | $829 |
| 60 | $319 | $765 | $1445 | 60 | $278 | $675 | $1262 |

As brokers, we represent major insurance companies such as Manulife, Sunlife, Foresters, CPP, Canada Life, Ivari, Industrial Alliance, RBC Insurance, BMO Insurance & Many more so we can get you the best lowest rates.

*Above rates are based on a preferred plus nonsmoker status and are subject to change*
*We have done everything to ensure that the premiums contained in this comparison is up-to-date and correct. However, WE CANNOT GUARANTEE ACCURACY.*

**Contact Raj or Dharshini | Phone: 647.888.7016 | www.InsuranceProtection.biz**

## OTHER INSURANCES & INVESTMENTS

- ★ Critical Illness Insurance
- ★ Life Insurance with Critical Illness Coverage (Hybrid Insurance)
- ★ Visitors Insurance
- ★ Super Visa Insurance for Parents & Grand Parents
- ★ Emergency Medical Insurance
- ★ Health & Dental Insurance
- ★ Disability Insurance
- ★ RRSP - RESP
- ★ Segregated Funds

**WE HELP YOUR PEACE OF MIND FROM LIFE'S UNCERTAINTIES!**

### Non-Medical Insurance for special cases

Within the past 3 years if you have not been treated for:
(1) Cancer or Malignant Tumor | (2) Organ Transplant | (3) HIV/ AIDS | (4) Incurable Terminal Illness | (5)Heart Failure or Peripheral Vascular Disease.
**YOU ARE APPROVED!**

கடந்த 3 ஆண்டுகளுக்குள் நீங்கள்
(1) புற்றுநோய் அல்லது வீரியம் மிக்க கட்டி
(2) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை
(3) HIV/AIDS எச்ஐவி/எய்ட்ஸ்
(4) குணப்படுத்த முடியாத முனைய நோய்
(5) இதய செயலிழப்பு அல்லது புறவாஸ்குலர் நோயால் பாதிக்கப்படவில்லை என்றால்
நீங்கள் அங்கீகரிக்கப்படுவீர்கள்!

### Generational Legacy Plan

Plan by Grand Parents to their Grand Children (Parents too can invest for their children)
பேரக்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கான காப்பீடு (தாத்தா பாட்டி அல்லது பெற்றோர் மூலம்)

### Critical Illness Insurance

Up to 24 Illnesses such as Heart Attack, Coronary Bypass, Stroke, Cancer, Benign Brain Tumor, Kidney Failure, etc. (With money back option)

FOR FULL LIST OF ILLNESSES PLEASE CALL US

**RAJ V SELVADURAI**
INSURANCE & INVESTMENT | BROKER & ADVISOR
DIRECT: 647.888.7016

**OM FINANCIAL INC.**
7191 YONGE STREET,
THORNHILL, ON L3T 0C4



# தமிழரசுக்கு ""கதவடைத்த"" தமிழர்களின் தேசம்

***"எம்முடன் எந்தக் கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது தயாரிக்கப்பட்ட ஜெனீவாவுக்கான கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையெழுத்திடாது" என அறிவித்த சுமந்திரன், ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடாது அறிவித்த வடக்கு, கிழக்கு ஹர்த்தாலுக்கு அந்தக்கட்சிகளின் ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்?***

**— பாலா —**

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவ பிரசன்னத்தை அகற்றக்கோரி இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விடுத்திருந்த பூரண ஹர்த்தால் போராட்டத்திற்கான அழைப்பு பெரும்பாலான பகுதிகளில் புறக்கணிக்கப்பட்டு தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்களும் வர்த்தகர்களும் அமைப்புக்களும் கதவடைப்பு செய்துள்ளமை வெறுமனே ஹர்த்தால் மீது கொண்ட வெறுப்போ அல்லது அரசுக்கான ஆதரவோ அல்ல. ஒட்டுமொத்தமாக தமிழரசுக்கட்சியின் சர்வாதிகார, தலைக்கன அரசியல் மீது கொண்ட வெறுப்பாகவே வெளிப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம், முத்துஐயன்கட்டு குளத்தில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்திற்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு, வடக்கு - கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவ பிரசன்னத்தாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அதனால் இராணுவத்தினரை வெளியேற்றுமாறும் கோரி இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

முன்னதாக கடந்த 15 ஆம் திகதி ஹர்த்தால் போராட்டம் என அறிவிக்கப்பட்ட நிலையில், அன்றைய தினம் மன்னார் மடு தேவாலய பெருநாள் என்பதால் 18 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் இந்த ஹர்த்தால் அழைப்பு முறையாக திட்டமிடப்படாது, ஏனைய தமிழ் தேசியக்கட்சிகள், வர்த்தக சங்கங்கள், வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், அமைப்புக்கள் என எவருடனும் கலந்துரையாடப்பட்டது அவசர அவசரமாக விடுக்கப்பட்டமை வெளிப்பட்ட நிலையில் இந்த போராட்டத்திற்கு பல தரப்புக்களிடமிருந்து எதிர்ப்புகள் வெளிப்படத் தொடங்கின.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் தனிநபரொருவர் தனது தனிப்பட்ட, தலைக்கன அரசியலுக்காக ஹர்த்தாலைப் பயன்படுத்த முற்படுத்துவதாகத் தெரிவித்து ஓரிரு கட்சிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், அமைப்புக்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து பின்வாங்கின. இதனையடுத்து, ஹர்த்தால் போராட்டம் மேற்கொள்ளும் நேரத்தை மட்டுப்படுத்தி தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஞாயிற்றுக்கிழமை ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்த நிலையிலேயே திங்கட்கிழமை ஹர்த்தால் இடம்பெற்றநிலையில் வடக்கு கிழக்கில் அரசுக்கும் இராணுவத்திற்கும் பதிலாக தமிழரசுக்கட்சிக்கும் அதன் தலைக்கன அரசியலுக்கும் தமிழ்தேசம் கதவடைப்பு செய்தது.

தமிழரசுக் கட்சி விடுத்த இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு புறக்கணிக்கப்பட அதன் பதில் பொது செயலாளரான எம்.ஏ. சுமந்திரனின் சர்வாதிகார, தலைக்கன அரசியலே பிரதான காரணமாக இருந்தது. இதற்கு இரு சம்பவங்களை மட்டும் புரிந்து கொண்டால் போதுமானது. ஆனால் சுமந்திரனோ அல்லது அவருக்கு உசுப்பேற்றும் சில அல்லைக்கைகளோ புரிந்துகொண்டாலும் புரியாதது போலவும் தெரிந்து கொண்டாலும் தெரியாததுபோலவும் அல்லது ஏனைய தரப்புக்களை வசைபாடியும் விமர்சித்தும் குற்றம் சாட்டிக்கொண்டும் தமது தலைக்கன அரசியலை தொடரவே செய்வர்.

இதில் முதல் காரணம்விரைவில் ஜெனீவா கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமாரை முதன்மைப்படுத்திய தமிழ்த் தேசிய பேரவை, ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் தமிழரசுக் கட்சி கையொப்பம் இடவில்லை. இதற்கு தமிழரசுக்கட்சியின் பதில் பொது செயலாளரான எம்.ஏ. சுமந்திரன் கூறிய காரணம் "தமிழ் தேசியக்கட்சிகளில் பெரிய கட்சி. நாம். எமக்கு 8 எம்.பி.க்கள் உள்ளனர். அவ்வாறான நிலையில் எம்முடன் எந்த கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது தயாரிக்கப்பட்ட ஜெனீவாவுக்கான கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையெழுத்திடாது" என்பதுதான்.

ஆனால் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி, தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு கடிதத்தை அனுப்பும் முயற்சியை முன்னெடுத்த நிலையில் இந்தக் கடிதத்திற்கு ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி ஒப்புக்கொண்டது. கையொப்பமிடவும் சம்மதித்தது. எனினும், இறுதிக் கட்டத்தில், அக்கட்சி பல விடயங்களில் பொய்யுரைத்தது. திட்டமிட்ட பொய்களைக் கூறி இணக்கப்பாட்டைத் தவிர்த்தது. குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திற்குப் பிறகு, தங்களுக்குள் பேசப்பட்ட விடயங்களுக்கு மாறாக, அக்கட்சியின் செயலாளர் சுமந்திரன் ஊடகங்களிடம் தவறான தகவல்களைத் தெரிவிதுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

சரி சுமந்திரன் கூறுவதுபோல் தமிழரசுக்கட்சியுடன் கலந்து பேசாது ஜெனீவாவுக்கான கடிதம் தயாரிக்கப்பட்ட பின்னர் அதில் கையொப்பமிடுமாறு கேட்கப்பட்டிருந்தால் அது தவறு. நிச்சயம் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். அதனால் தமிழரசு அதில் கையொப்பமிட மறுத்தது நியாயம் என்று வைத்துக்கொண்டால் வடக்கு, கிழக்கு மாகாணம் தழுவிய ஹர்த்தால் போராட்டத்தை நடத்த சுமந்திரன் எந்தக்கட்சியினரோடு, அமைப்புகளோடு, வர்த்தக் சங்கங்களோடு, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளோடு கலந்துரையாடினார்? அவ்வாறு கலந்துரையாடாமல் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து விட்டு ஹர்த்தாலை தோற்கடிக்க சில கட்சிகள் திட்டமிட்டு செயற்பட்டதாகவும் யாழ் மக்களையிட்டு தான் வெட்கமடைவதாகவும் எவ்வாறு கூற முடியும்?


அரசுக்கு ஒரு ஒரு எதிர்ப்பை காட்ட வேண்டுமானால் சாதாரணமாக ஒரு போராட்டத்தை நடத்தி விட்டு போயிருக்க முடியும். ஆனால் "வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும்" என்ற மிகப்பெரிய கோரிக்கையை தமிழரசுக்கட்சி முன்வைத்த நிலையில் அதற்கு வலு சேர்க்கும் வகையில், அரசுக்கு பாரிய அழுத்தம் கொடுக்கும் வகையில் சர்வதேசத்தை திரும்பிப்பார்க்க வைக்கும் வகையில் ஹர்த்தால் போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அடர்க்கு ஏனைய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை நிச்சயம் கோரியிருக்க வேண்டும் கலந்துரையாடியிருக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க துரோகிக் கட்சியான இராணுவ ஒட்டுகுழு வாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலக் கதவை தட்டி சரணடைய முடிந்த தமிழரசுக்கட்சியின் தலைவரோ அல்லது அதற்கு அனுமதியளித்த செயலாளரோ ஏன் தமிழ் தேசியக்கட்சிகளுடன் இது தொடர்பில் பேச, ஆதரவைக் கோர விரும்பவில்லை?

இரண்டாவது காரணம்முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகிய பின்னர் காணாமல்போன நிலையில் முத்துஐயன்கட்டுக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மரணம். முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் சிவநகரில் பிரதேசத்தில் அமைந்துள்ள 12 ஆவது சிங்கப் படையணி முகாமை அப்புறப்படுத்துவதற்குச் சில நாள்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது. இங்கு சென்ற 5 இளைஞர்களே இராணுவத்தினரால் தாக்கப்பட்ட நிலையில் ஒருவர் அருகில் உள்ள குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை முதன்மைப்படுத்தியே சுமந்திரன் ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த இளைஞர்கள் இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள். இராணுவத்திற்காக வேலைசெய்பவர்கள். இராணுவம் கொடுக்கும் பொருட்களை விற்று பணம் கொடுத்து பங்குபிரிப்பவர்கள். இராணுவத்திற்கு போதைப்பொருட்களை விநியோகிப்பவர்கள் என்ற குற்றச்சாட்டும் இவர்கள் மீது அப்பகுதி மக்களினால் முன்வைக்கப்படுகின்றது. இவர்களின் தொலைபேசி இலக்கங்களை இராணுவத்தினர் பத்திரப்படுத்தி வைக்குமளவுக்கு அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்கள். இவ்வாறான இந்த இளைஞர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரச்சசினைகளினால் தொடர்புபட்ட சம்பவத்திற்கு சுமந்திரன் அவசரப்பட்டு விடுத்த ஹர்த்தால் அழைப்பு மக்கள் மத்தியில் விசனத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இதனால் இந்த ஹர்த்தாலில் மக்கள் ஆற்வம் காட்டவில்லை.

ஜெனீவாவுக்கான கடித விடயத்தில் தமிழ் தேசியக்கட்சிகளுடன் ஒத்துப்போக மறுத்து நாம் தான் பெரிய கட்சி என்ற ஆணவத்துடன் தனது தலைக்கன அரசியலுக்காக ஜெனீவாவில் தமிழர்சார்பில் ஒரு அழுத்தத்தை கொடுக்க மறுத்த, வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தால் தொடர்பில் ஏனைய தரப்புக்களுடன் கலந்துரையாடி ஆதரவு கோர விரும்பாத, முத்துஐயன்கட்டுக்குள சம்பவம் தொடர்பில் தெளிவின்றி ஏனையவர்கள் போராட்டங்களை அறிவிக்க முன்னர் தாம் முந்தி பெயர் போட்டுக்கொள்ளவேண்டும் என்ற அவசரத்தில் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்த தலைக்கன அரசியல் செய்யும் தமிழரசுக்கட்சியின் பதில் பொது செயலாளரான எம்.ஏ. சுமந்திரனுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் ஒரு பாடத்தை கற்பிக்கவே தமிழரசின் பதில் பொது செயலாளராக சுமந்திரன் விடுத்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய ஹர்த்தால் போராட்டத்தை தமிழ் மக்கள் தோற்கடித்து தமிழரசுக்கு கதவடைப்பு செய்தனர்.

தனது தலைக்கன அரசியலினாலும் பிடிவாதத்தினாலும், மிரட்டல்களினாலும் தமிழரசுக்கட்சியினரை கட்டி ஆள்வது, ஆட்டுவிப்பதுபோல் போல் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளையும் வர்த்தக சங்கங்களையும், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், பொதுமக்களையும் ஆட்டுவிக்கலாம் என்ற சுமந்திரனின் ஆணவத்திற்கு, அடாவடிக்கு தமிழ் மக்களினால் வழங்கப்பட்ட மரண அடியாகவே வடக்கு, கிழக்கு மாகாண ஹர்த்தால் போராட்ட தோல்வி அமைந்துள்ளது. இந்த தோல்வி தமிழ் மக்களுக்கான தோல்வியோ அல்லது தமிழ் மக்கள் போராட்டங்களில் நம்பிக்கை இழந்து விட்டார்களோ என்பதல்ல. இது சுமந்திரனின் தலைக்கன அரசியலுக்கு மக்கள் புகட்டிய பாடம். இதிலிருந்தும் சுமந்திரன் பாடம் கற்றுக் கொள்ளவில்லையாயின் தமிழ் தேசிய அரசியலிலிருந்து தமிழரசுக்கட்சி காணாமப்போகும். அதற்கான முன் அறிவிப்பே தமிழரசுக்கட்சிக்கும் சுமந்திரனுக்குமான தமிழ்மக்களின் கதவடைப்பு.



கனடிய செய்திகள் Canadian News

# Computek College's 2025 Graduation Ceremony

## Over 500 Graduates were awarded with their Diplomas in different Programs

# கொம்பியுடெக் கல்லூரியின் 2025ம் ஆண்டிற்கான தொழிற்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

### 500க்கும் அதிகமான மாணவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன



கனடாவில் வெவ்வேறு துறைகளில் பயிற்சி நெறிகளையும் தொழில் அனுபவத்தையும் வழங்கும் வகையில் வெவ்வேறான துறைகளில் வழங்குவதில் முன்னணியில் திகழும் கொம்பியுடெக் கல்லூரி (Computek College) நடத்திய வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமையன்று 19ம் திகதி மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 500க்கும் அதிகமான மாணவ மாணவிகளுக்கு அன்றையை தினம் அவர்கள் தேர்ந்தெடுத்த துறைகளில் கற்றுத் தேர்ந்ததை உறுதிப் படுத்தும் முகமாக பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.












கொம்பியுடெக் கல்லூரி மற்றும் அதனோடு இணைந்து செயற்படும் நிறுவனங்களின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான முரளி ஸ்ரீநாராயணதாஸ் அவர்கள் தலைமை தாங்கினார். அங்கு அவர் உரையாற்றும் போது. கனடாவில் அன்றைய தினம் தாங்கள் விரும்பிய துறைகளில் வகுப்பறைக் கல்வயையும் பயிற்சியையும் பெற்றுக் கொண்ட 500க்கும் அதிகமானவர்களின் பயிற்சிக் கட்டணங்களை மத்திய அரசும் மாகாண அரசும் கொம்பியுடெக் கல்லூரியின் நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளன. எனவே தகுதியுள்ளவர்கள் எமது கல்லூரியில் இணைந்து தொழில்வாய்ப்புக்களை இலகுவாகபெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரொறன்ரோ பிராந்தியத்தில் மூன்று கிளைக் கல்வி நிறுவனங்களை நடத்தி அவற்றில் வர்த்தகம் - உடல்நலம் - மறறும் தொழில்நுட்பம் (Business, Healthcare, and Technology) ஆகிய துறைகளில் பயிற்சி நெறிகளை நடத்தி தற்போது பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற மேற்படி தொழிற்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளும் வகையில் பல தொழில் வழங்குவோர் மற்றும் சமூகு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிச் சான்றிதழ்கள் பெற்ற அனைவரையும் வாழ்த்தினர்.

# நியூசிலாந்தில் அவுஸ்த்திரேலியா வாழ் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீட்டு விழா

உலக செய்திகள் World News




நியூசிலாந்து, ஓக்லாண்ட் (Auckland) மாநகரில் அவுஸ்த்திரேலியா வாழ் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியிடப்பட உள்ளது.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்... தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

நியூசிலாந்து, ஓக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபம், 13வது மே சாலை, மவுண்ட் ரோஸ்கில், ஓக்லாந்து 1041 எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை 1800 முதல் 2030 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது. (Mt Roskill War Memorial Hall, 13 May Road, Mt Roskill, Auckland 1041, New Zealand).

இந்நிகழ்வு திரு. சண் வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை திரு. ரமேஷ் செல்வகுமார் அவர்கள் உரையாற்றுவார். அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை திரு. சிவசரவணபன் சர்வேஸ்வரன், திரு. பூபாலசிங்கம் பிரதீபன், திரு. கௌரிசங்கர் சுதந்திரபாலன், திரு. பிரேம்குமார் கந்தசாமி, திருமதி. வித்தியா நந்தகுமார் மற்றும் திருமதி. தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்குவார்கள்.

அத்துடன் இந்நிகழ்வில் சிறப்புரையை திரு. மேவின் கொன்ஸ்ரன்ரைன் அவர்களும் உரையாற்றுவார். ஓக்லாண்ட் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை நூலாசிரயர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.



கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும்

# சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம். சிறப்பு மாநாடு. (1024 – 2025)

கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம். சிறப்பு மாநாடு. (1024 -2025) எதிர்வரும் 22 ரு 23 நவம்பர் 2025. சியிம்ரீப், அங்கோர். நகரில் கம்போடியா தேசத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலகமுழுவதுள்ள தமிழறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இதையொட்டி நவம்பர் 21 - 26 வரை ஆறு நாட்கள் பன்முக விழாவாக கொண்டாடப்பட்டுள்ளது.


இந்த 6 நாட்கள் விழாவிலும் பங்கேற்று அங்கோர்வாட் களப்பயணம் மேற்கொண்டு மாநாட்டு நிகழ்விலும் கலந்துகொள்வோருக்கு அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்படுகின்றன.

நவம்பர் 21 முதல் 26 வரை 6 தினங்கள் தங்குவதற்கு. ஐந்து நட்சத்திர விடுதி, உணவு, கம்போடிய விசா, பேருந்து, அங்கோர்வாட், ஆயிரம் லிங்கங்கள், நாம் குல்லென் அருவி, படகு சுற்றுலா மற்றும் இரண்டு தினங்கள் மாநாட்டு நிகழ்வில் பங்கேற்பு.

அனைத்திற்குமான மொத்தக் கட்டணம். அமெரிக்க டாலர் **$**400 மட்டுமே. (Excluding Air Ticket).

இம்மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வரலாற்று நோக்கில் பல்லவர்களும், பாண்டியர்களும், சோழர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரசாண்டும், நட்புறவு பாராட்டியும் மக்களோடு கலந்து தங்களது கலை, சிற்பம், கோவில், பண்பாடு ஆகியவற்றை நிறுவி பெரும் பண்பாட்டுப் புரட்சியும், வணிகத் தொடர்பும் செய்திருந்தனர்.




மாநாட்டுத் தொடர்பானக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி: angkorthamizhsangamtn@gmail.com
அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 30.09.2025

மேற்கண்ட விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:
திருமதி. தாமரை சீனுவாசராவ்
வாட்ஸ்அப்: +91 9489902060
இரா. ஞானசேகரன்
துணைத் தலைவர்
வாட்ஸ்அப்: +855 81 41 21 79

## வீணாவின் கவிக்கணை

மது உண்டு,மதி கெட்டு,
உணர்வின்றி மிதி பட்டு,
மயக்கத்திலும் கிறக்கத்திலும்
இரக்கமின்றி வாழ்ந்து
உங்கள் குடியுடன்
அடுத்தவர் குடியையும்
சேர்த்து கெடுக்கும்
குடி காரர்களே,
நீங்கள் குடிப்பது விஷம்
என்று அறிந்தும்
அதை ருசிப்பதேனோ?
அதை நிறுத்தி சுகமாய்
வாழ மறுப்பதும் நியாயமோ?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை அரசின் கெடுபிடிப் போக்குக் காரணமாக தமிழ் அகதிகளைஅழைத்து வருவதை ஐ.நா நிறுத்தியது

- ந.லோகதயாளன்



போரால் இடம்பெயர்ந்து சுய விருப்பின் பேரில் நாடு திரும்ப விரும்பும் அகதிகளை இலங்கைக்குக் கூட்டி வந்து மீளக் குடியேற்றும் தனது செயன்முறையை இலங்கை அரசுத் தரப்பின் முறையற்ற கெடுபிடிப் போக்குக் காரணமாக நிறுத்தி வைத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பான யு.என்.எச்.சி.ஆர் (ஐ.நா. அகதிகள் தூதரகம்). மீளழைத்து வரப்படும் தமிழ் அகதிகள் இலங்கைக்கு வந்தவுடன் கைது செய்யப்படலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலைமை காணப்படுவதால் இலங்கைத் தமிழ் அகதிகளை நாட்டுக்குக் கூட்டிவரும் செயன்முறையை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

முத்துஜயன்கட்டு இளைஞரின் இலங்கைக்கு வந்தவுடன் குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் குறைந்தது நான்கு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என வந்த தகவல்கள் காரணமாக, ஓகஸ்ட் 14, 2025 அன்று திருச்சியிலிருந்து கொழும்புக்கு ஏழு அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டம் கடைசி நிமிடத்தில் இரத்துச் செய்யப்பட்டது. அதிகாரபூர்வ வட்டாரங்களின்படி, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தால் திருப்பி அனுப்பப்பட்ட ஃப்ரீமேன் ரிச்சர்ட் வேல்வவந்தரம் (வயது54), ஓகஸ்ட் 12, 2025 அன்று கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் ஒரு நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இருப்பினும், திருப்பி அனுப்பும் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அவர் திரும்பி வருவது தொடர்பான எந்த முன் பாதுகாப்பு கவலைகளும் இல்லை என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல், மே 28, 2025 அன்று, உள்நாட்டுப் போரின் போது பல தசாப்தங்களுக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறிய மற்றொரு தமிழ் அகதி யாழ்ப்பாணத்தில் தரையிறங்கிய பிறகு கைது செய்யப்பட்டார். ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தின் உதவியின்றி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய தமிழ்த் தம்பதியினரும் கைது செய்யப்பட்டனர். இந்த ஜோடி 1996 முதல் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது. வந்தவுடன், அவர்கள் குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளைச் செல்லுபடியாகும் பாஸ்போர்ட் அல்லது பயண ஆவணங்கள் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை அதிகாரிகள் கைது செய்வது இதுவே முதல் முறை. "தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதே அடிப்படைக் கொள்கை. ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லாவிட்டால் கைதுகள் செய்யப்படாது. இன மோதலில் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் அகதிகள் நாட்டை விட்டு வெளியேறியமையால் குடியேற்றச் சட்டங்களை மீறுவது மன்னிக்கப்படுகின்றது." என்று திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபட்ட ஒரு மூத்த இந்திய அதிகாரி தெரிவித்தார். மேற்கோள் காட்ட விரும்பாத அதிகாரி, இந்தப் பிரச்சினை இராஜதந்திர வழிகளில் எடுத்துக் கொள்ளப்படுவதாகக் கூறினார். அகதிகள் குடியேற்ற விதிகளை மீறியமைக்காகக் கைது செய்யப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவார்கள் என்றும், இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை, நாடு திரும்பும் செயல்முறை நிறுத்தி வைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டபோது அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் ஆயரானபோது அரசியல் நோக்கம் கொண்டதாக தேசிய மக்கள் சகதி தெரிவித்த பின்பும் நாடுதிரும்பிய மேலும் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு ஊடகங்களிற்கும் வெளிக்கொணர்ந்தமையும் குறிப்பிட்டார்.

இவ்வாறான சூழலில் ஐ.நாவின் இந்த முடிவு வெளிவந்துள்ளமை அரசை மேலும் நெருக்கடிக்கு தள்ளும் எனக் கருதப்படுகின்றது.

# அறிவித்தல்!

இலங்கையின் வட வடக்கு கிழக்கின் பகுதிகளின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்த பன்னாட்டு ஆய்வு மாநாடு.
எதிர்வரும் ஒக்டோபர் 10ம் திகதி முதல் 12ம் திகதி வரை டொரன்டோ பல்கலைக்கழகத்தில் அனைத்துலகத் தமிழர் பேரவை இன் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.
இந்த சர்வதேச அறிவியல் மாநாடு, உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் மொழி, கலாச்சாரம், கல்வி, சமூக முன்னேற்றம், அபிவிருத்தி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி போன்ற துறைகளில் முன்னேற்றகரமான வழிமுறைகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் கருத்து வெளிப்பாடுகளையும் பகிரந்து கொள்ளும் மிக முக்கியமான ஒரு தளமாக அமையவுள்ளது.
பின்வரும் விடயப்பரப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன:

-தன்னிறைவு மற்றும் இயற்கை வளங்களை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல்,
-மின்மய மாற்றமும் வளர்ச்சிக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பமும்,
-காலநிலை மாற்றம் மற்றும் அதன் பொருளாதார விளைவுகள்,
-சிறந்த கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் மூலம் வினைத்திறன் மிக்க தொழிலாளர் சமூகத்தை உருவாக்குதல்,
-இளைஞர்களின் இடம்பெயர்வு விருப்பங்களும் உள்ளூர் வேலை வாய்ப்பு தீர்வுகளும்,
-பாலின வலிமைப்படுத்தல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு,
-விவசாயத் துறையின் நவீனமயமாக்கல்,
-மீன்பிடி துறையின் நவீனமயமாக்கல்,
-நிலைத்தன்மை கொண்ட சுற்றுலா மற்றும் அதனூடான வேலை வாய்ப்புகள்,
-மின்மயமாக்கல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்,
-மக்களின் ஆரோக்கியத்தையும் வீடமைப்பையும் மேம்படுத்துதல்,
-புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பில் நேரடி முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குதல்
-இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதில் எதிர் கொள்ளப்படும் சாவல்களும் அதற்கான தீர்வுகளும்,
-யுத்தத்தின் பின்னரான பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் சாவல்கள்,
-தமிழ் கலாச்சாரத்தைப் பேணுவதில் உள்ள சவால்கள்,
போன்ற விடயங்களில் இந்த மகாநாடு கவனம் செலுத்தவுள்ளது.
எமது தாயகத்தில் நிலையான பொருளாதார சமூக அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
இந்த மகாநாடு தமிழர்களின் அறிவியல் பங்களிப்பு, கலாச்சார பாரம்பரியம் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை வலியுறுத்தும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமையவுள்ளது.
உலகில் பல்வேறு நாடுகளில் பரந்து வாழும் தமிழ் அறிஞர்கள் பலரும் தமது ஆய்வுக் கட்டுரைகளை இந்த மாநட்டில் சமர்ப்பிக்கவுள்ளனர்.
இந்த ஆய்வுகள் எமது தாயகத்தின் முன்னேற்றத்தை மையப்படுத்தியதாக அமையும் என்பதோடு அங்குள்ள கள நிலைமையினை அறிவுபூர்வமான அணுகுவதற்கான ஒருவாய்ப்பினையும் வழங்கும் என நாம் நம்புகின்றோம்.
இதன் மூலமாக வடக்கு கிழக்கின் முன்னேற்றத்திற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்த தெளிவினை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.
அத்துடன் இங்கு அடையாளப் படுத்தப்படும் சில முக்கியமான விடயங்களுக்கு தீர்வினை காணும் வகையிலான செயல் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் அனைத்துலகத் தமிழர் பேரவை தயாராக இருக்கின்றது.
இந்த மகாநாடு தொடர்பான விடயங்களை conference.tamilfederation.org என்ற எமது இணையத்தளததில் பெற்றுக் கொள்ள முடியும். இது குறித்த மேலதிக விபரங்களுக்கு conference@tamilfederation.org மூலம் எம்மை தொடர்பு கொள்ள முடியும்.

முரளி சிவகுரு
மகாநாடு ஒருங்கிணைப்பாளர்

IMPORTANT DATES
Abstract Submission Deadline: August 25> 2025
Acceptance Notification: August 29> 2025
Full Presentation Deadline: September 19> 2025

Registration Deadline for Participants
Early bird registration: September 19> 2025
$50 Standard Registration (Regular $75)
$20 Students and Seniors (Regular $25)
Lunch and refreshments are included in the registration fee. On request> limited number of fee waivers available.







# ஈழத்துத் திருக்கோயில்கள்

## (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1160



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
## திருகோணமலை

“ *அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்*
*ஒத்தொவ்வாத பல் பிறப்பொழித்து நம்மை ஆட்கொள்வான்*
*மத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்*
*எத்தினால் இடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே.* ”

போர் தர்மத்தை உரைத்த கிரு'ணபரமாத்மாவின் ஆலயம் இலங்கையில் அமைந்தால் அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டு, போர்தர்மமாவது கடைப்பிடிக்கப்படும் என்பதில் பலரும் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குவது, எதிர்காலத்தில் அரங்கநாதர் ஆலயம் இலங்கையில் அமைவதற்குரிய நல்ல அறிகுறியாகவே தோன்றுகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இவ்வாறான ஒரு தீர்வைக் கூறப்பட்டிருக்கின்றது. ஐதீகம் என்ற தளத்தில் மக்கள் கொண்ட நம்பிக்கையே மேற்கூறிய விடயங்களின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றது.

“உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்” என்ற ஆழ்ந்த தத்துவத்தை உணர்ந்தால், ஒருவர்க்கொருவர் அன்புசெலுத்தி, வாழமுடியும். இதுவே சமயங்களின் முடிபாகவும் காணப்படுகின்றது.

திருகோணமலையிலே காணப்படுகின்ற ஸ்ரீகிரு'ணன் கோவில், வடஇந்திய போர்வீரர்களின் தேவைகருதி அமைக்கப்பட்டது. இக்கோவில் அமைப்பதற்கு திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் பெரிதும் துணைபுரிந்துள்ளனர். தமது பணிமுடிந்து வடஇந்தியப்படைவீரர்கள் இந்தியாவிற்கு மீண்டும் செல்லநேரிட்டது. இவ்வேளையில் ஆலயம் அமைக்க உதவிய ஆரியநாட்டவரிடமும், திருவிளங்க நகரத்தாரிடமும் ஆலயப்பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் சென்று விட்டனர்.

இதன்பின்னர் இவ்வாலயத்திலே பூசை செய்துகொண்டிருந்த திரு. இரகுநாதஐயர் என்பவருடன் சேர்ந்து திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் 1837 ஆம் ஆண்டு, ஒரு ஒப்பந்தம் செய்தனர். இதற்கமைய மேலதிக அதிகாரங்களைப்பெற்ற இரகுநாதையர், பூசைப்பொறுப்பை ஏற்று ஆலயத்தை நடத்தி வந்தார். புராதன தமிழ் மக்கள் தேடிவைத்த ஆத்மீகச் செல்வங்களாக சைவமும், வைணவமும் விளங்குகின்றன. சைவர்கள் சிவத்தையும், வைணவர்கள் வி'ணுவையும் வழிபடுவது சமய உலகின் சமரச வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருகோணமலைப்பிரதேசத்தில், சிவாலங்களைப்போன்று ஏனைய ஆலயங்களும் போற்றப்படுகின்றன.

திருவிளங்கநகரத்தார், ஆரியநாட்டவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, திருகோணமலையிலுள்ள ஸ்ரீ கிரு'ணன் கோவில் பூசை வழிபாடுகளைப் பொறுப்பேற்று நடத்திவந்த இரகுநாதையருக்குப் பின், ஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்களும், அவரின்பின் ஸ்ரீ சுப்பையாக்குருக்களும், பூசை செய்து வந்தார்கள். இவர்களின்பின் ஸ்ரீ பஞ்சநதக் குருக்கள் இவ்வாலயத்தில் பூசை செய்யும் பொறுப்பை ஏற்றார். இவர் இரகுநாதஐயருடைய மகள் சர்மசம்வர்தனி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டவர். திருமணவழியிலுள்ள உரிமையினால் இவர் ஸ்ரீ கிரு'ணன் கோவிலில் பூசைசெய்யத் தகுதி பெற்றார். ஸ்ரீ பஞ்சநதக்குருக்களின் பின், இவருடைய மகனான யோகீஸ்வரக் குருக்கள் ஆலயப்பொறுப்பையேற்று மிகத் திறம்பட நடத்தியுள்ளார். மிகக் கற்றறிந்தவராக விளங்கிய இவர் காலத்தில் ஆலயம் மிகச் சிறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இவரது மறைவிற்குப்பின் இவருடைய மகள், ஆலய நிர்வாகப் பொறுப்பையேற்று நடத்தியுள்ளார்.

ஆதியில் சிறு கோவிலாக, குறிப்பிட்ட சாரார் வணங்குவதற்காக மட்டுமே அமைக்கப்பட்ட ஆலயத்தின் திருப்பணி வேலைகள், காலத்திற்குக் காலம் நடைபெற்று வந்துள்ளது. ஆரியநாட்டாரும், திருவிளங்க நகரத்தாரும், இவ்வாலயத்திலே பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். இவர்கள் மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், என்பனவற்றைக் கட்டியுள்ளார்கள்.

1941 ஆம் ஆண்டு ஆலயத்திலே பல திருப்பணி வேலைகள் நடைபெற்று, குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தேறியது. ஆயினும் 1942 ஆம் ஆண்டு இடம்பெற்ற யப்பானியரின் குண்டுவிச்சினால் ஆலயப் பராமரிப்பு சீர்குலைந்து காணப்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் காரணமாக, திருகோணமலைப்பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் பல பராமரிப்பாரின்றிக் காணப்பட்டது. அவ்வாறான ஒரு நிலை, ஸ்ரீகிருஷ்ணன் கோவிலுக்கும் ஏற்பட்டது. ஆயினும் பதட்டமான சூழ்நிலையிலும் நித்தியபூசைகள் இவ்வாலயத்திலே நடந்துள்ளன. பல தசாப்தங்களின் பின்னர் 1980 ஆண்டு காலப்பகுதியிலும், அதன் பின்னரும் ஆலயத்திலே பல திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீகிரு'ணன் ஆலயத்தின் கருவறை மிக அழகிய விமானத்தோடு காணப்படுகின்றது. கருவறையிலே ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிரு'ண பரமாத்மா எழுந்தருளியுள்ளார். அர்த்தமண்டபத்தில், ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிரு'ண பரமாத்மாவின் எழுந்தருளி விக்கிரகமும், வரதராஜப்பெருமாள், நாகதம்பிரான் ஆகியோருடைய சிலா விக்கிரகமும் வைக்கப்பட்டுள்ளது. ஸ்நபன மண்டபத்தில் ஸ்ரீ நாராயணமூர்த்தியும், ஸ்தம்ப மண்டபத்தில் கருடாழ்வாரும், ஸ்ரீ ராமானுஜரும் நிறுவப்பட்டுள்ளனர்.

வளரும்...



# இவ்வார ராசிபலன்

## 22-08-2025 வெள்ளி தொடக்கம் 28-08-2025 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். பூர்வீகச் சொத்து சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். வீண் வம்பு விலகும். நிர்வாக ஆதரவு உண்டு. உறவினரால் நன்மை உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத் தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். உறவினர்களின் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அமையும். தனவரவு பெருகும். எதிரிகள் உதிரியாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரைபகவதி, அதிர்ஷ்ட எண்: *7,9,2,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,E




**ரிஷபம்:** சாதனை நிகழ்த்தும் வாரம். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். மாற்றங்கள் ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய வாய்ப்பு கூடும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலைத் தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். நன்மதிப்பு வரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பெரிய திருப்பம் ஏற்படும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் கூடும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உறவினரால் செலவு உண்டு. வளம் பெருகும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். கடன் பிரச்சனை தீரும். கர்மவினைகள் அகலும். உறவால் பணவிரயம் கூடும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R




**மிதுனம்:** சாதனைகள் படைக்கும் சோதனையான வாரம். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. சுபக்காரியச் செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தவரால் உதவி உண்டு. முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழிலில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புக்கள் பெருகும். நன்மைகள் அதிகமாகும். முன் கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவுகளால் பாதகம் உண்டு. சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்வி சலுகைகள் கிட்டும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *4,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,E




**கடகம்:** கன்னியமான புண்ணியம் சேரும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வீடு, மனை யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் மாறும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. கடின உழைப்பு தேவைப்படும். கடன் சுமை அதிகமாகும். காரியம் கைகூடும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணம் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. கலை ஈடுபாடு அதிகரிக்கும். எடுத்த காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. அடுத்த நபரால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். தொழில் போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை குறையும். உடல் உபாதை கூடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகைத் தொல்லை தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,T




**சிம்மம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். மருத்துவச் செலவு ஏற்படும். மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. அமைதியாக இருப்பது நல்லது. பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பெண்களில் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை ஏற்படும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். உத்தியோக உன்னதம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *2,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மன அமைதி குறையும். பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமைகள் விலகும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. கலை ஆர்வம் பெருகும். உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மாறும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் கூடும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *9,5,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**துலாம்:** விரக்திகள் மறையும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். உஷ்ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். கட்டிடத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத் தேடி வரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். திறமைகள் அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். தன்னம்பிக்கை கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் பயணம் உண்டு. மனச்சுமை குறையும். நினைவாற்றல் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பக்குவமான பேச்சு அவசியம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். பயணம் தடைப்படும். திடீர் செலவு ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,X

***(தொடர்ச்சி 22 பக்கம்)***


DISCOVER
THE LION IN YOU
LION
EXTRA
STRONG BEER
STOUT
ENDORSED BY THE
GREAT BEER HUNTER,
MICHAEL JACKSON
ONLY STOUT IN ASIA TO BE
LISTED IN 300 BEERS TO TRY
BY ROGER PROTZ
99/100 ratebeer
AVAILABLE IN 473ML CANS AT
LCBO
LCBO.COM
BEER STORE
THEBEERSTORE.CA
FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020
OR EMAIL:
FRED@FINEBEERS.CA

கனடிய செய்திகள்
Canadian News

# At the annual Canadian National Exhibition CNE. in Toronto the National Ethnic Press and Media Council of Canada celebrated its official opening of Council's Booth

# இவ்வருட Canadian National Exhibition CNE வர்த்தகக் கண்காட்சியில் தனது சாவடியை திறந்து அங்கத்தவர்களோடு கொண்டாடிய National Ethnic Press and Media Council of Canada என்னும் ஊடகவியலாளர்களின் அமைப்பு




This is the 38 annual participation of National Ethnic Press and Media Council of Canada at Toronto's CNE exhibition.

Saturday the 16th of August, at the annual Canadian National Exhibition CNE in Toronto, the National Ethnic Press and Media Council of Canada celebrated the official opening of Council's Booth.

Following the opening ceremony, please a Reception was hosted by the President and Board Members, at the Green Café. There drinks and baked food were served to attended Members of the Council and Political Leaders.

-----

இவ்வருடத்தின் Canadian National Exhibition CNE வர்த்தகக் கண்காட்சியில் தனது சாவடியை திறந்து வைத்து அங்கத்தவர்களோடு கொண்டாடிய National Ethnic Press and Media Council of Canada என்னும் ஊடகவியலாளர்களின் அமைப்பானது கனடாவில் இயங்கும் 600 ஊடகத்துறை அங்கத்தவர்களைக் கொண்ட நாடு தழுவிய அமைப்பாகும். மேற்படி அமைப்பின் தலைவர் Mr. Thomas Saras அவர்களின் முயற்சியினால் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் பத்திரிகையாளர் பலர் பல வகையான சலுகைகளைப் பெற்றுவருகின்றார்கள். அமைப்பின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவரான "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களும் தனது குழுவினருடன் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார். பல அரசியல் தலைவர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டமை சிறப்புக்குரிய விடயமாகும்.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**








## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி மறையும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு உண்டு. மறைமுக தொல்லை நீங்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். காரியத்தடை அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. விவசாய விளைச்சல் அதிகரிக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. நலமே விளையும் அற்புதமான வாரம். நல்லவர் நட்பு உருவாகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் கூடும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப ஒற்றுமை கூடும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்புக்கள் விலகும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,5,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**தனுசு:** புதிய பொறுப்பு வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதியப்பொருள் சேரும். பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பணம் புரளும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக ஏற்றம் உண்டு. சோதனைகள் நீங்கும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். தன வரவுகள் பெருகும். பொருள் வரவு உண்டு. மனநிறைவு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். மங்களகரமான வாரம். மன அமைதி கெடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q




**மகரம்:** ஆரோக்கியத்தில் திருப்தி தரும் வாரம். ஆபரண பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். பதவியில் உயர்வு வரும். புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிட்டும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். தெய்வப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டுக் கிட்டும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். திருப்தி ஏற்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். தீய எண்ணங்கள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**கும்பம்:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து உயரும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செயல் திறமை வெளிப்படும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் ஏற்படும். விரக்திகள் மறையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். தொழில் போட்டிகள் மறையும். ஏற்றமதி தொழில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து தடைப்படும். சந்தோஷம் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத நன்மை கிட்டும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும்
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I




**மீனம்:** நவகிரஹம் அனுகிரஹம் கிடைக்கும் வாரம். நலம் விளையும் காலம். நன்மைகள் அதிகமாகும். நட்புக்கள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் கூடும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு. உள்ளம் மகிழும். முக்கிய எண்ணம் நிறைவேறும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். எதிர்ப்புக்கள் விலகும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் குறையும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். முதலீடுகளை தவிர்க்கவும். குடும்ப மனநிறைவு தரும். காதலில் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. வெகுமதிகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. தந்தை நலம் கூடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,6,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,V


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
28th ANNIVERSARY
தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P நாகேந்திரன் அவர்கள்
நாதஸ்வர வித்வான் M.P N நிருபன் அவர்கள்
தவில் வித்துவான் லயஞானதிலகம் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்
திரு. T.A.K.சண்முகநாதன்
திரு. D.பாபு
திரு. K.S.K.மணிகண்டன்
திரு. A.K.ஜயப்பன்
திரு K.A நந்தீஸ்குமார்
திரு.S.சந்தானபாரதி
திரு S.லக்சுமிநரேசையா
திரு V. ராஜா
திரு M. கிருஷ்ணா
திரு S. மணிகண்டன்
திரு.J.சூரியகுமார்
திரு G. பிரேம்குமார்
திரு D. வினோத்
மோர்சிங் திரு K.S.பாலாஜி சாய்ராம்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 28வது வருட விழாவை இவ்வருடம் ஒகஸ்ட் மாதம் 30ஆம் தேதி கொண்டாடுகிறது. இவ்விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் சாவகச்சேரி மற்றும் ரொறன்ரோ நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P. நாகேந்திரன் அவர்களும் அத்துடன் தவில் வித்துவான் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் அத்தோடு இடும்பவனம் திரு. K.S.K. மணிகண்டன் அவர்களும் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் வித்வான்களும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
இடம் :
SRI SATHYA SAI BABA CENTRE
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2
Intersection: Middlefield & Finch
காலம் : Aug-30-2025 சனிக்கிழமை
நேரம் : மாலை, 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW



உதயம் 1533 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 22, 2025

# "தமிழர"சின் கடையடைப்பு : வெற்றியா தோல்வியா?



### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

தமது கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் உள்ளூராட்சி சபைகளை வைத்துக்கொண்டு கடையடைப்பை இலகுவாக அமுல்படுத்தலாம் என்று சுமந்திரன் சிந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை. அது முழுமையாக தோற்கவும் இல்லைமுழுமையாக வெற்றி பெறவும் இல்லை.குறிப்பாக மக்கள் அதிகமுடைய யாழ்ப்பாணத்தில் அது பெருமளவுக்குச் சொதப்பிவிட்டது.கிழக்கில் ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. வன்னியிலும் அது பாதி வெற்றி,பாதி தோல்வி என்ற நிலைமைதான்.

இப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்று சுமந்திரன் திட்டமிட்டு உழைத்தார். கடையடைப்பை எந்த விலை கொடுத்தாவது வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவரும் அவருடைய அணியும் சகல மாவட்டங்களிலும் கடுமையாக உழைத்தனர்.வெற்றியைக் குறித்த சந்தேகங்கள் இருந்த காரணத்தாலும் விமர்சனங்களின் விளைவாகவும் கடையடைப்புக்கு நேர வரையறையையும் அறிவிக்க வேண்டிவந்தது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு கடையடைப்பு பூரண வெற்றி பெறத் தவறியது.

உண்மையில் இது தமிழரசுக் கட்சியின் அல்லது சுமந்திரனின் போராட்டம் அல்ல. முழுத் தமிழ் மக்களும் இனமாகப் போராட வேண்டிய விடயம் இது. முல்லைத்தீவில் இறந்த இளைஞர் யார்? அவர் இறப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது யார்?
(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# கனடாவில் மிசிசாகா கிரியேசன்ஸ் — 20 ஆண்டுகளின் வெற்றிகரமான மேடை நாடகப் பயணம்



- ரொறன்ரோவிலிருந்து சத்தியன் -

கனடாவில் நாடகக் கலைஞரும் இயக்குனருமான பார்த்தா சங்கரா அவர்களினால் ஆரம்பிக்கப்பெற்ற "மிசிசாகா க்ரியேஷன்ஸ்" மேடை நாடக அமைப்பானது தனது 20 ஆண்டுகளின் வெற்றிகரமான மேடை நாடகப் பயணத்தின் வெற்றியை சிறந்த மேடை நாடகங்கள் மூலம் கொண்டாடி மகிழ்ந்தது.

2025 ஆகஸ்ட் 9ம் தேதி, சனிக்கிழமை, மிசிசாகா ஆநயனழறளயடந வுாநயவசந அரங்கில், "Mississauga Creations 20th Celebrations" சிறப்பு விழாவிற்கு பல துறைசார்ந்த வெற்றியாளர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்கள். அவர்களில் பலர் மிசிசாகா க்ரியேஷன்ஸ் நாடக அமைப்பிற்கும் அதன் நிறுவனர் பார்த்தா சங்கரா அவர்களுக்கும் தங்கள் ஆதரவை கடந்த காலங்களில் வழங்கி வந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# அல்பர்ட்டாவின் ரிவர் — க்ரோ:ஃபூட்டின் இடைத்தேர்தலில் வெற்றியீட்டிய பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக "கலக்க"வுள்ளார்!

## கனடிய பாராளுமன்றத்தில் பிரதமர் மார்க் கார்னிக்கு பலத்த சவாலாகவும் இருப்பாரா?



### ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

அல்பர்ட்டாவின் ரிவர் - க்ரோபூட் தொகுதியின் இடைத்தேர்தலில் 18ம் திகதி திங்கள்கிழமை வெற்றியீட்டிதனால் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே கனடிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்குவார்!

அத்துடன் அவர் எதிர்வரும் நாட்களில் கனடிய பாராளுமன்றத்தில் பிரதமர் மார்க் கார்னிக்கு பலத்த சவாலாகவும் இருப்பார் என அரசியல் விமர்சகர்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.
(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# ஒன்ராறியோ அரசும் — ரொறன்ரோ மாநகர சபையும் இணைந்து போக்குவரத்து வசதிகள் உள்ள இடங்களின் அருகில் அதிக வீடுகள் உருவாக்கத் திட்டம்



கனடாவின் ஒன்ராறியோ அரசும் ரொறன்ரோ மாநகர சபையும் இணைந்து பேருந்து, தொடரி நிலையங்கள் மற்றும் நிலக்கீழ் வழித்தடங்களுக்கு அருகில் அதிக வீடுகளைக் கட்டவுள்ளன. இத்திட்டம் 120 போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில், குறிப்பாக ஸ்காபரோப் பகுதிகளில், உயரமான, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதனடிப்படையில் ரொறன்ரோவில் வரும் 25 ஆண்டுகளில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான புதிய வீடுகள் அமைக்கப்படலாம். இதனால் குடியிருப்பாளர்கள், புதிதாகக் குடியேறுபவர்கள் மற்றும் இளையோர், கல்விக்கூடங்களுக்கும் வேலைத்தளங்களுக்கும் அருகில் வசிக்க வழியேற்படும்.

இதுபற்றி ஒன்றாரியோ மாகாண அரசின் அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறுகையில், "போக்குவரத்தின் முக்கியத்துவத்தையும், அதுவே மக்களை அவர்கள் இல்லங்களிலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுடன் இணைப்பதற்கு இன்றியமையாதது என்பதையும் எமது அரசு அறிந்துள்ளது" என்றார்.

ஸ்காபரோவிலுள்ள முக்கிய போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளால் பொதுமக்கள் பயனடைவர்.

# தமிழரசுக்கு "கதவடைத்த" தமிழர்களின் தேசம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

*""எம்முடன் எந்தக் கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது தயாரிக்கப்பட்ட ஜெனீவாவுக்கான கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையெழுத்திடாது"" என அறிவித்த சுமந்திரன் , ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடாது அறிவித்த வடக்கு,கிழக்கு ஹர்த்தாலுக்கு அந்தக்கட்சிகளின் ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்?""*
*--கே.பாலா*

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவ பிரசன்னத்தை அகற்றக்கோரி இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு,கிழக்கு மாகாணங்களில் விடுத்திருந்த பூரண ஹர்த்தால் போராட்டத்திற்கான அழைப்பு பெரும்பாலான பகுதிகளில் புறக்கணிக்கப்பட்டு தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்களும் வர்த்தகர்களும் அமைப்புக்களும் கதவடைப்பு செய்துள்ளமை வெறுமனே ஹர்த்தால் மீது கொண்ட வெறுப்போ அல்லது அரசுக்கான ஆதரவோ அல்ல.ஒட்டுமொத்தமாக தமிழரசுக்கட்சியின் சர்வாதிகார,தலைக்கன அரசியல் மீது கொண்ட வெறுப்பாகவே வெளிப்பட்டுள்ளது.
(தொடர்ச்சி 15ம் பக்கம்)